உ
சிவமயம்



# சைவ இறுதிச் சடங்கு நடைமுறையும் விளக்கமும்

(புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழருக்கு ஏற்றவை)

# SAIVA FUNERAL RITES WITH EXPLANATION

(Suitable for expatriate Saiva Tamils)


நா. மகேசன்

**N. Mahesan**

**56, Alamein Avenue, Carlingford,**

**NSW 2118, Australia**

**mahesan@optusnet.com.autralia**

சிட்னி, அவுஸ்திரேலியா



முதற்பதிப்பு மார்கழி 1998 பதிப்புரிமை ஆசிரியருக்கே





**Web Edition September 2006**

**Aum Muruga Society, Sydney, Australia**

ஓம் முருகா கழகம், சிட்னி, அவுஸ்திரேலியா

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பொருளடக்கம் | 2 |
| Introducing the Author by Dr. R. Sri Ravindrarajah | 3 |
| முன்னுரை: திரு. நா. மகேசன் | 4 |
| அணிந்துரை: திரு. க. கதிர்காமநாதன் | 6 |
| மதிப்புரை: கலாநிதி பொன். பூலோகசிங்கம் | 8 |
| நூலாய்வுரை: திரு. மா. அருச்சுனமணி | 10 |
| கணினிப் பதிப்புரை: கலாநிதி இ. ஸ்ரீ இரவீந்திரராஜா | 11 |
| இறுதிச் சடங்கு நடைமுறை விளக்கம் | 12 |
| இறுதிச் சடங்கு செய்யும் நடை முறைகள் | 22 |
|     திருப்பொற்சுண்ணம் | 27 |
| திருமுறை பாடல்களும் பிறவும் | 40 |
|     தேவாரம் | 40 |
|     திருவாசகம் | 46 |
|     திருவிசைப்பா, திருப்பல்லாண்டு | 62 |
|     பெரியபுராணம் | 63 |
|     திருப்புகழ் | 64 |
|     பட்டினத்தார் பாடல் | 65 |
| A Brief Discription of a Saiva Funeral Service | 69 |
| இறுதிக் கிரியைக்குத் தேவையான பொருட்கள் | 71 |
| ஆசிரியரின் பிற வெளியீடுகள் | 72 |

## INTRODUCTION TO THE AUTHOR, NAGALINGAM MAHESAN



***Saiva Last Rites with Explanation*** is authored by a multi-talented Mr. N. Mahesan. The author was born as the last (fifth) child to the Nagalingam and Chinnamah of Pandaitharippu, Jaffna, Sri Lanka in 1933. He received his education from the St. Henry's College, Illavalai and worked as an accountant with the Ceylon Government Service.

In 1959, he married to Selvaratnam of Uduvil. In 1981, Mahesan went to Western Samoa with his wife, son and daughter and worked as an accountant in the Department of Post and Telecommunication and then as the Chief accountant in the Treasury. In 1987, he migrated to Australia and worked for 10 years in the Police Service of NSW until retirement.

Mahesan had developed his deep interest in the Tamil language through his involvement in drama. In 1960s, he played main roles in stage and radio dramas. In Sydney, he staged a number of dramas with the Tamil youths through the Tamil Schools and Saiva Schools in Sydney.

From 1965 to 1981, Mahesan conducted weekly 45 minutes children program for 8 to 15 years age group for a ten year period and his popularity earned him the unofficial title, *Vaanoli Mama* (or Radio Uncle). In Sydney, he continued his radio productions with the radio stations, Tamil Mulkkam and Australian Tamil Broadcasting Corporation.

Mahesan served as the Director for Cultural activities with the Vivekananda Sabai in Sri Lanka for a number of years. In 1988, he joined the Saiva Manram Inc. in Sydney and served in the management committee for a number of years and served as its President in 1993/94. He teaches at the Sunday Saiva School. Since 1973, Mahesan authored several books containing dramas, short-stories and novels. His interest to educate religious and moral values led to the publication of several articles and books in Tamil and English. Mahesan is now voluntarily conducting the Saiva last rites service for the departed Tamil Saivites. In recognizing the community service by Mahesan, he was awarded "THE ACHIEVER" by the NSW Government in 2006.

In 1998, Mahesan had written this book entitled, Saiva Last Rites with Explanation, in Tamil in order to guide any Saivites who wish to conduct similar last rites services in the absence of Saiva Kurukkals. This web edition includes a brief description of the Saiva funeral service in English for the benefit of non-Tamil speaking Tamil Saivites.

**Dr. R .Sri Ravindrarajah**

# முன்னுரை (முதற்பதிப்பு)

பழக்கங்கள், வழக்கங்கள், நடைமுறைகள், சடங்குகள் இவை எல்லாம் மனித சமுதாயத்தின் நன்மைக்கும், வசதிக்கும் தக்கவாறு மனிதரால் அமைக்கப் பட்டவை. அவை கால, தேச சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப் படுகின்றன. ஆதியிலே சைவக்குருக்கள் தமது பூசை வழிபாடுகளையும், திருமணங்களையும் மற்றும் சமய நிகழ்வுகளையும் தமிழிலேயே நடத்தினார்கள். தமிழகத்தில் சமஸ்கிருத மொழி கி.பி. முதலாம் நூற்றாண்டு அளவில் தான் சிறுகச் சிறுகப் புகுந்து, பின்னர் தமிழோடு கலந்து, தமிழைப் புறக்கணித்துத் தன்னாதிக்கம் பெற்றது என்று மறைமலை அடிகளார், சிலம்புச் செல்வர் மா. பொ. சிவஞானம் அவர்கள் முதலிய அறிஞர்கள் கூறியும் எழுதியும் வந்திருக்கிறார்கள்.

தற்போது சைவ சமயத்தவருடைய இறுதிச் சடங்கு நடைமுறைகளை நடத்தி வைப்போர் சைவக் குருக்கள்மாரே. பிராமணக் குருக்கள்மார் சைவசமய இறுதிச் சடங்குகளில் பங்கு கொள்வதில்லை. அவர்கள் திருமணங்களை மட்டுமே நடத்தி வைக்கிறார்கள். இருப்பினும் சைவ இறுதிச் சடங்குகளைப் பொறுத்தமட்டில், திருமுறைப் பாடல்களும் தமிழ் மொழியும் பெரும் பங்கு வகித்து வருகின்றன. யாழ்ப்பாணத்துச் சைவக் குருக்கள்மார்கள் இந்த வழக்கத்தைக் கைவிடாது நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறார்கள். இந்தச் சடங்குகளில் சைவ சித்தாந்தக் கொள்கைகள் மேலோங்கி நிற்கின்றன.

இறப்பையும் பிறப்பையும் தவிர்க்க வல்லது இறைவழிபாடே. இறந்தவருடைய உயிரானது அழிவதில்லை: உடல்தான் அழிவது. உயிரானது நற்கதி அடைந்து, மேலான நிலையை எய்தவேண்டும் என்பதற்காகவே, இறுதிச் சடங்குகள் செய்யப்படுகின்றன. இவை அனைத்தும் இறைவழிபாடாகவே அமையும். இறந்தவரின் உற்றார், உறவினர், ஆறுதல் அடையவும், உடலை விட்டுப் பிரிந்த உயிர் நற்கதி அடையவும், இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வோர் அனைவரும், இதனை ஒரு வழிபாட்டு நிகழ்ச்சியாகக் கருதி ஒழுக வேண்டும். இவ்வைபவத்தில் அனைவரும் அமைதியாக இருந்து ஆண்டவனை வேண்டுதல் செய்வதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். இந்த இறுதிச்சடங்குகளில் ஆழ்ந்த கருத்துகள் அடங்கியுள்ளன. எனது சிற்றறிவுக்கு எட்டியவரை விளக்க முனைந்திருக்கிறேன்.

புலம் பெயர்ந்து வாழும் சைவ மக்களுக்கு அவர்களுடைய இறுதிச் சடங்குகளை நடைமுறைப்படுத்தச் சைவக் குருமார்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. சேவை மனப்பான்மை உள்ள ஓரிருவர் இந்தச் சடங்குகளை

நடத்தி உதவுகிறார்கள். அவர்கள் தமிழில் தேவார, திருவாசகங்களைப் பாடித் தாம் வாழ்ந்த நாட்டில் வழி வழியாய் நடந்துவந்த இறுதிச்சடங்குகளைப் பின்பற்றி இச்சடங்குகளை நடத்துகிறார்கள். அவர்களுடைய சேவை தன்னலமற்றது. பாராட்டுதற்குரியது. அவர்கள் வாழ்க!

இத்தொண்டில் ஈடுபடுவோருக்கு உதவும் முகமாகவும், சேவை மனப்பான்மை கொண்ட சைவ ஒழுக்க நெறியுடையோர் இந்தச் சமூக சேவையில் ஈடுபட ஒரு கையேடு வேண்டும் என்ற நோக்கத்தினாலும் இச்சிறிய நூலை வெளியிடுகிறேன். காலத்துக்கு ஒவ்வாத கொள்கைகளையும், நடைமுறைப் படுத்தக் கால, தேச சூழ்நிலைகள் இடந்தராத சடங்கின் பகுதிகளையும் நீக்கியும், மாற்றியும் அமைத்திருக்கிறேன். குற்றம் நீக்கிக் குணம் கொள்ளும்படி பணிவுடன் கைகூப்பித் தலை தாழ்த்தி வேண்டுகிறேன்.

இப்பொதுத் தொண்டில் முன்னணித் தொண்டராக விளங்குகிற அன்பர் க. கதிர்காமநாதன் அவர்கள், இந்நூலைப் படித்து, எனக்கு ஆலோசனைகள் கூறி, அணிந்துரையும் வழங்கியுள்ளார். கதிர்காமநாதன் அவர்கள் இத்தொண்டு மட்டுமல்லாது, சமயப்பணி, சமூகப்பணி, யோகாசன வகுப்புகள் முதலிய பல தரப்பட்ட சேவைகளில் ஆர்வத்தோடும், அன்போடும், தன்னலன் கருதாமல் உழைத்து வருகிறார். அன்னாருக்கு எம்மினம் என்றென்றும் கடப்பாடுடையது, அவர் வாழ்க! அவருடைய சேவை வாழ்க! என்று எம்மினத்தின் சார்பில் வாழ்த்தி நன்றியைத் தெரியப்படுத்துகிறேன்.

பேராசிரியர் பொன். பூலோகசிங்கம் அவர்கள் நூலைப் பரிசீலித்து மதிப்புரை வழங்கியுள்ளார். டாக்டர் திருமதி தவம் கணபதிப்பிள்ளை அவர்கள் எழுத்துப் பிழை பார்த்து ஊக்குவித்தார்கள். சைவசித்தாந்தத்தில் ஈடுபாடுள்ள அன்பர் அருச்சுனமணி மாணிக்கம் அவர்கள் நூலைப் பற்றிக் கருத்துரை வழங்கியுள்ளார். இவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நா. மகேசன்**
**56, Alamein Avenue, Carlingford,**
**NSW 2118, Australia**
**December 1998.**

# திரு க. கதிர்காமநாதன் அவர்களின்
## அணிந்துரை

ஒவ்வொரு மனிதனும் முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைகளுக்கு அமைய இவ்வுலகில் பிறக்கிறான். இரண்டு உண்மைகளை நாங்கள் மறக்கக் கூடாது. ஒன்று கடவுள், மற்றது இறப்பு. மனித வாழ்வில் பிறப்பும் இறப்பும் திடம். மனிதராகப் பிறந்த எல்லோரும் இறைவனடி சேருவதற்கு, மதங்களில் கூறியபடி வழிபாடுகளிலும், சடங்குகளிலும் ஈடுபட்டுத் தமது மனத்தை இறைவனிடத்தில் வைக்க எத்தனிக்கிறார்கள். எல்லோருடைய குறிக்கோளும் இனிப் பிறவியொன்று எடாமல் இறைவனிடத்தில் சேர்வதேயாகும்.

வெவ்வேறு பிறவி எடுப்பதும், இறைவனடி சேர்வதும், அவரவர் முற்பிறவியிலும், இப்பிறவியிலும் செய்த கர்ம வினைப்படியே நடக்கும். ஒருவர் உயிரோடு இருக்கும் போதே, அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதே சிறந்த முறையாகும். அதை எமது இனத்தவர்கள், சிநேகிதர்கள் என்று பாரபட்சம் காட்டாது செய்வது மிக உயர்ந்த நிலையாகும். அது இறைவழிபாட்டை ஒக்கும், இறைவழிபாட்டுக்கு உறுதுணையாக நின்று, இறைவனை அடையச் சுலபமான வழியாகும்.

ஒருவர் உயிர்விட்ட பின்பு அவருடைய ஆத்மா அவலநிலையில் நிற்கவிடாது, இறைவனைப் பிரார்த்தித்து, அவருடைய ஆத்மாவை இறைவனிடம் சேரவோ, சாந்தியடையவோ செய்வது எங்களுடைய கடமை. அதனைத்தான் சான்றோர் தொன்று தொட்டுச் செய்து வந்தார்கள். இந்தச் சடங்கை இறுதிச்சடங்கு அல்லது அபரக்கிரியை என்று கூறுவார்கள். இந்தச்சடங்கு முறைகளில் இடத்துக்கிடம் சில மாற்றங்கள் இருந்தாலும், பொதுவான முறைகள், எல்லா இடங்களிலும் கடைப் பிடித்து வரப்பட்டுள்ளன. இந்த இறைவழிபாட்டில், இறந்த வீட்டுக்கு வருவோர் எல்லோரும் அமைதியான முறையில் இருந்து கலந்து கொள்வதால், மனச்சாந்தி கிடைப்பதுமல்லாமல், இறந்தவரின் ஆத்மாவுக்கும், கலந்து கொள்வோருக்கும், இறைவனின் அருள் கிட்டுவதும் உண்மையாகும்.

எல்லோரும் இறை நம்பிக்கையுடன் இப்படிப்பட்ட சடங்கு முறைகளை அறிந்து, அவற்றின் உட்கருத்துகளை விளங்கி அவற்றைக் கைக்கொள்ளும்போது, மனதாரப் பிரார்த்தனை செய்த பலன் உண்டாகும். இறை அருள் கிடைக்கும். அதன் பலன் இறந்தவரின் ஆத்மாவுக்குக் கிட்டும். கலந்து கொள்வோருக்கும், இறந்தவரின் குடும்பத்தினருக்கும் ஆறுதலும் அமைதியும் ஏற்படும்.

இந்தச்சடங்கு முறைகளையும், அவற்றின் உட்கருத்துகளையும் மிகவும் எளிமையாகவும், சிறப்பாகவும் எல்லோருக்கும் விளங்கக்கூடிய முறையில்

எங்களுக்கு இந்நூல் மூலம் தந்திருக்கிறார் திரு. நா. மகேசன் அவர்கள். சடங்குகள் நடக்கும்போது விளக்கம் கூறுவது கடினமான செயல். இவற்றை என்ன முறையில் அடியார்களுக்கு எடுத்துக்கூற முடியுமென்று பலமுறை சிந்தித்திருக்கும் வேளையில், திருவாளர் மகேசன் அவர்கள் இந்நூலை வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சிதரும் செயலாகும்.

இந்நூலை நன்றாகப் படித்து, இச்சடங்கு முறைகளை நன்றாக விளங்கி, அமைதியான முறையில் அன்பர்கள் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றும்போது, ஒருமனத்தோடு இறந்த அடியாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்தவர்கள் ஆவார்கள்.

**க. கதிர்காமநாதன்**
**No. 50, Dean Street, South Strathfield,**
**N.S.W. 2136, Australia.**

# கலாகீர்த்தி, பேராசிரியர், டாக்டர் பொன். பூலோகசிங்கம் அவர்களின் மதிப்புரை

ஆதியில் வருவது தோற்றம், அந்தத்தில் வருவது முடிவு. தோன்றுவதெல்லாம் முடிவடைகின்றன. முடிவுக்குப் பின் என்ன? என்ன? ஆம், மனிதகுலம் காலா காலமாகத் தேடி வருகிறது. பண்பாட்டு ஏணியின் அடியில் உள்ளனவும் நுனியில் உள்ளனவும் ஆய்ந்தோய்ந்து நிற்கின்றன. அறிவியலுக்கு அப்பாலும் ஏதேதோ இருக்கின்றன என்னும் ஐயம் எழாமல் இல்லை. அதனால் நம்பிக்கை செழிக்கும் சூழல் உருவாகின்றது அதுவே மானிடத்தின் போக்கிடம்.

ஒருவர் இறந்தபின்னும் அவருக்கு வாழ்வுண்டு என்ற நம்பிக்கை கொண்டிருக்கும் இனங்களிலே தமிழினமும் ஒன்றாகும். தமிழினம் பெரும் பான்மையாக வாழும் பிரதேசங்களிலே கண்டுபிடிக்கப் பெற்ற தாழிப் புதையல் களும், நடுகற்சமாதிகளும் உள்ளடங்கும் பெருங்கற்பண்பாடு இக்கருத்தினை ஆதரிக்கும். இச்சமுதாய நம்பிக்கையின் பாரிய செல்வாக்கு, அதற்குச் சமயக் கிரியைகளிலே முக்கிய இடத்தினைப் பெற்றுத் தந்துள்ளது.

இறந்தபின் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள். அபரம், பின். அபரக் கிரியைகளிலே ஈமக்கிரியை அல்லது பிரேதக்கிரியை, சாம்பல் அள்ளுதல், அந்தியேட்டி, மாசிகம், ஆட்டத்திதி, திவசம் என்பன அடங்குவன. இங்கு நண்பர் மகேசன் ஈமக்கிரியைகளைப் பொருளாகக் கொண்டுள்ளார். ஒருவர் இறந்து 31ஆம் நாள் (அந்தியேட்டி) வரை அவர் இறந்த இடத்திலே அருவமாய் நிற்பர் என்று சைவர்கள் கருதுவர். அந்தியேட்டியில் அவருடைய தொடர்பு நீக்கப்படுகின்றது. இதனால் அந்தியேட்டி வரை செய்யப்படும் கிரியைகள் உடலைத் தொடர்புபடுத்திச் செய்யப்படுவன. அவற்றின் பலனை அவர் நேரடியாகவே பெறுகின்றார். அந்தியேட்டியின் பின்பு செய்யப்படும் அபரக் கிரியைகள் உயிரைக் கருதிச் செய்யப்படுவன. அவற்றின் பலனைப் பிதிர்கள் ஏற்று அவர்கள் எங்கிருந்தாலும் அங்கங்கு சேரச் செய்கிறார்கள். **பிதிர்கடன் பிரதான கடன் என்பர் சைவர்.**

இறந்தவர் உயிர்நீக்கும் போது கிடந்த இடத்திலே அன்று தொட்டு இளநீர் அல்லது தண்ணீர்ச்செம்பு வைப்பதும், "எட்டு" க்கு அவர் விரும்பியவை சகலவற்றையும் படைத்து வைப்பதும், பாடல் படிப்புகள் முடிந்த பின்பு படைத்தவற்றிற் சிறிது சிறிதாக எடுத்து முகட்டை நோக்கிக் காட்டுவதும் எரிந்த பின்னும் உடல் இருந்த சூழலிலே இறந்தவர் இருக்கிறார் என்ற நம்பிக்கையைக் காட்டுவன.

ஈமக்கிரியைகளில் கும்ப பூசை, அக்கினி காரியங்கள் இறந்தவரைச் சிவமாக்கும் முயற்சிகள், அவருடைய பாவங்களைப் படிப்படியாக அழிக்க எடுக்கும் முயற்சிகள். பாவம் அழிய அழிய மலபந்தம் விலகத் தொடங்கும். மலபந்தம் விலகும் அளவிற்குச் சிறிது சிறிதாகச் சிவத்தன்மை பற்றும். கால அடைவில் சரியான பக்குவம் வாய்க்கும்போது முழுமையாக உயிர் சிவத்தன்மை பெற்று விடும்.

உயிரானது வினையைத் தொலைக்க மீண்டும் மீண்டும் பிறந்திறந்து இருவினையொப்பு, மலபரிபாகம், சாந்திநிபாதம் என்னும் நிலைகளை அடைந்து இறையடி நீழலிலே ஆனந்த நிலையில் அடங்கும் என்பது சைவர் கருத்து.

தம்மண்ணை விட்டு பரதேசியாகப் புறப்பட்ட தமிழ் மக்கள் அந்நியப்படுத்தப்படும் சூழலில் தம் பாரம்பரியங்களைச் சிக்கெனத் தழுவிக் கொள்கிறார்கள். அவற்றிலே ஈமக்கிரியைகள் பற்றிய பாரம்பரியங்களை ஒழுங்காகச் செய்விக்கும் சூழல் அருந்தலாகக் காணப்பட்ட நிலமையை உணர்ந்து நண்பர் மகேசன் அவற்றை வரன்முறையாகத் தொகுத்தளித்துள்ளார். ஆத்தோடு அமையாது அவற்றின் தாற்பரியங்களையும் விளக்கத் துணிந்துள்ளார். ஆவர் முயற்சி போற்றப்பட வேண்டியது. சைவத்தையும் தமிழையும் இரு கண்களெனப் போற்றும் மகேசன் தெடர்ந்து சேவை புரிய எல்லாம் வல்ல சக்தி அருள் புரியட்டும்.

**கலாநிதி பொன். பூலோகசிங்கம்**
**11/3, Burlington Road, Homebush,**
**NSW 2140, Australia**

# திரு. மா. அருச்சுனமணி அவர்கள் வழங்கிய நூலாய்வுரை

திருமிகு நா. மகேசன் அவர்கள் **"சைவ இறுதிச் சடங்கு நடைமுறையும் விளக்கமும்"** என்ற இந்நூல், பழந்தமிழரின் சைவ மரபை நமக்கு மீட்டுத் தரும் ஓர் அரிய நூல் என்றால் மிகையாகாது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே, தமிழரின் மணச்சடங்கும், பிணச்சடங்கும் பிறமொழி ஆதிக்கத்தால் பீடிக்கப்படாமல் இருந்ததற்குச் சான்றுகள் பல உண்டு. அன்றிருந்த ஈமச்சடங்குகள் எப்படி நடந்திருக்கக்கூடும் என்பதைப் பன்னிரு திருமுறைகளை ஆராய்ந்தும், சைவர்களின் இன்றைய பழக்க வழக்கங்களின் மூலக் கருத்துக்களைக் கண்டு தெளிந்தும், ஈமக்கிரியைகளைத் தொண்டெனச் செய்யும் பெரியோர்களை அணுகியும் அறிந்தும், அதனை எளிய தமிழில் தந்திருக்கிறார்கள் அவர்.

உயிர் (ஆன்மா) உடலை விட்டுப் பிரிந்தபின், முன்வினைகளுக்கேற்ப தன் பயணத்தைத் தொடங்கக்கூடியது, தொடரவேண்டியது என்பது சைவ சித்தாந்தம் காட்டும் உண்மை. இதனை உணர்ந்த சைவ சமயத்தவர், மறைந்தவரின் ஆன்மாவின் பயணம் சிரமமின்றி அமைய வேண்டிய சில சடங்குகளையும், வழிபாடுகளையும் செய்வர். இவ்வாறு தொண்டு தொட்டு நடந்து வரும் சைவ இறுதிச் சடங்கு ஒவ்வொன்றின் பின்னணியிலுள்ள கருமங்களைச் சிறப்பாகவும், தெளிவாகவும் தந்துள்ளார் இந்நூலாசிரியர். சடங்குகள் ஒவ்வொன்றையும் செய்யும் முறைகளையும் முறையாகத் தொகுத்துத் தந்திருக்கிறார் அவர்.

இந்நூலில் தரப்பட்ட முறைகளை நுகர்ந்து அவற்றின் மேன்மையை உணர்ந்தவர்களில் அடியேனும் ஒருவன். ஆதலால் சைவத் தமிழர் ஒவ்வொரின் இல்லத்திலும் அவசியம் கைவசம் இருக்க வேண்டிய புத்தகமிது எனப் பணிவோடு பரிந்துரைக்கிறேன். வாழ்க திருவாளர் நா. மகேசன் அவர்களின் இத் திருத்தொண்டு.

திருச்சிற்றம்பலம்

**அருச்சுனமணி மாணிக்கம்**
**Lidcome, NSW, Australia**

# கணினிப் பதிப்புரை

சைவ சமயத்தார் தமது சொந்த நாடுகளில் வளமுடன் வாழ்ந்து வந்த போது கடைப்பிடித்து வந்த சமயச் சடங்குகளை புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் போதும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வம் காட்டுகின்றார்கள். நமது பராம்பரிய சைவ சமயச்சடங்குளில் பொதிந்திருக்கும் ஆழ்ந்த உண்மைத் தத்துவங்களின் காரணமாகவே இச்சடங்குகள் இன்றும் அழியாது நமது வாழ்க்கை முறைகளில் ஒன்றிப் போயுள்ளன. உயிரினங்களுக்கு பிறப்பு இருப்பின் இறப்பு நிச்சயம். அரிய மானிடப்பிறப்பைப் பெற்ற நாம் நமது வாழ்வை வளமாக அமைத்து மரணிக்கும் போது நமது சவமான உடலை சிவமாக்கி பூரண வழிபாடு செய்தலே சைவ சமய ஈமக்கிரியைகளின் உள்நோக்களில் ஒன்றாகும். உடலை விட்டகன்ற ஆன்மாக்கள், இப்பூவுலகில் உள்ள பந்த பாசங்களிலிருந்து விடுபட்டு, மண், பெண் (ஆண்), பொன் ஆகிய மூன்று ஆசைகளைக் களைந்து, மறுபிறப்பை எய்யாது சிவனடியினைச் சேருதல் (அல்லது முத்தியைப் பெறுதல்) வேண்டும் என்பதனையே உண்மைச் சைவர்கள் விரும்புகிறார்கள். இறுதிச் சடங்கு .உடலை விட்டுப் பிரிந்த ஆன்மாவை நல்ல முறையில் வழியனுப்பத் தேவையான ஒரு முக்கியமான சடங்காக சைவர்கள் கொள்ளுதல் வேண்டும்.

*சைவ இறுதிச் சடங்கு நடைமுறையும் விளக்கமும்* என்ற நூல் சைவர்களுக்குத் தேவையான நூல்களில் ஒன்று. இதன் ஆசிரியர் திரு. நா. மகேசன் அவர்கள் சிட்னியில் பல வருடங்களாக சைவர்களின் இறுதிச் சடங்குகளை சமூகசேவையாகக் கொண்டு நடாத்தி வருகின்றார். இவரது அனுபவத்தின வாயிலாக அமைந்த இந்நூல் இலகு தமிழில் எழுதப்பட்டுள்ளது. திரு. மகேசன் அவர்களின் சமூகசேவையை அங்கீகரித்து **“சாதனையாளர்”** என்று 2006ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் நியு சவுத் வேல்ஸ் அரசாங்கத்தால் கௌரவம் பெற்றுள்ளார். இந்தப் புத்தகத்தைக் கையேடாகக் கொண்டு உலகில் பரந்து வாழும் சைவர்கள் இறுதிச் சடங்குகளை சைவ சமய முறைப்படி நடாத்த வேண்டும் என்ற பொதுநல நோக்கம் கொண்டு நூலாசிரியரின் அனுமதியுடன் ஓம் முருகா கழகம் இந்நூலை கணினிப் பதிப்பாக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றது. இந்தப் பதிப்பினால் உலகச் சைவர்கள் மிகவும் பயனடைவார்கள் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். வாழ்க மகேசன் வளர்க அவர்தம் தொண்டு.

**கலாநிதி இ. ஸ்ரீ இரவீந்திரராஜா**
**Aum Muruga Society, 15 Valda Place, Baulkham Hills, NSW 2153, Australia.**

# இறுதிச் சடங்கு நடைமுறை விளக்கம்

## 1. உயிர் பிரிகின்ற வேளையில் செய்யப்படுவன

உயிர் உடலை விட்டுப் பிரிகின்ற வேளை உடனிருக்கும் குடும்பத்தவர் அல்லது உறவினர், அழுது குழறாது, அமைதியாக இருந்து தேவார திருவாசகம் ஓதுதல், தொண்டை வறளாமல் இருப்பதற்காகப் பால் பருக்குதல், திருநீறு பூசுதல்.

உடலை உயிர் விட்டுப் பிரிகின்ற வேளையில், உயிருக்குச் சற்றுக் கலக்கம் ஏற்படும். ஐம்பொறிகளையும் விட்டு (மெய், வாய், கண், மூக்கு, நாக்கு) புலன் ஐந்தும் அடங்கும் போது தனிப்பட்ட ஒரு அனுபவமும், தடுமாற்றமும், தாங்கொணா வருத்தமும் உயிருக்கு ஏற்படுகிறது. இந்த வேளையில் அருகில் இருப்போர் கூச்சல் இட்டு அழுது குழறினால், உயிருக்கு மேலும் தடுமாற்றமும், குழப்பமும் ஏற்படும். இதனாலேயே அமைதியாக இருந்து, இறை சிந்தனைக்கு உரிய செயல்களைச் செய்யும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. **தேவார, திருவாசகங்களை ஓதும்போது, பிரிகின்ற உயிருக்கும், உடன் இருப்போருக்கும் அமைதியும், இறை சிந்தனையும் உண்டாகிறது.**

## 2. உடலைத் தெற்கு நோக்கி தலை இருக்கும்படி கிடத்துதல்

வடக்குத் திசையில் தலைவைத்துப் படுத்தால் உடலுக்குக் கெடுதல் ஏற்படும் என்ற நம்பிக்கை உண்டு, இறந்தவரின் தலை வடக்கே இருக்குமாயின் உடலுக்குப் பாதிப்பு ஏற்பட்டு உடல் விரைவாகப் பழுதடைந்து விடும் என்பதற்காகத் தெற்கே தலை இருக்க வேண்டும் என்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

## 3. உடல் விறைப்பதற்கு முன் செய்யப்படுவன

உடலின் வாயும், கண்ணும் மூடப்பட்டு இருக்கின்றனவா என்றும், கால் பெருவிரல்கள் இரண்டும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டிருக்கின்றனவா என்றும் (கால்கள் இடந்து பிடித்த நிலையில் இல்லாதிருப்பதற்காக) உறுதிப் படுத்திக் கொள்ளுதல்: கட்டுப் பற்கள் உடையோரின் பல் வரிசை வாயில் போடப்பட்டு இருக்கின்றதா என்றும் உறுதிப்படுத்துதல். இவை உயிர் நீங்கிய உடனே செய்யப்பட வேண்டியன.

உடல் சூடாறி, விறைத்து விட்டால், பின்னர் இவற்றை இலகுவாகச் செய்ய முடியாது. அதனாலேயே உடனே செய்ய வேண்டும் என்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். தற்காலத்தில் மருத்துவ மனைகளும், இறுதிச் சடங்குகளை நடத்த உதவுகின்ற நிலையங்களும் இருக்கின்றன. அவை இவற்றைக் கவனித்துக் கொள்ளும். இருப்பினும் அப்படி உடன் வசதி இல்லாத இடத்து, குடும்பத்தில் உள்ள எவரும் இவற்றைச் செய்யலாம்.

## 4. உடலை வெள்ளைச் சீலையால் மூடி வைத்தல்

உடலை ஈ, எறும்பு முதலியன அணுகாமல் இருப்பதற்காக உச்சியிருந்து உள்ளங்கால் வரை மூடிவைக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

## 5. உடலின் தலைமாட்டில் குத்துவிளக்கு ஏற்றுதல்

தற்காலத்தைப் போல், முற்காலத்தில் மின்விளக்குகள் இருக்கவில்லை. குத்து விளக்குகளே ஒளி தந்தன. உடலின் முகத்தைத் தெளிவாகப் பார்ப்பதற்காக முற்காலத்தில் தலைமாட்டில் குத்துவிளக்கு ஏற்றி வைக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். இக்காலத்தில் சைவர்கள் கலாசார முறையில் இந்த வழக்கத்தைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். மேலும் இறைவன் ஒளி வடிவானவன். அந்த ஒளியை ஏற்றி வைக்கும்போது இறைவன் அங்கே கூட இருக்கிறான் என்ற நம்பிக்கையாகவும் இருக்கலாம்.

## 6. தேவார, திருவாசகங்களை ஓதுதல்

உயிர் பிரிகின்ற நேரத்தும், பின்னர் இறுதிச் சடங்குகள் நிறைவு பெறும் வரையும், அதன் பின்னரும் குடும்பத்தவரோ, நண்பர்களோ யாராயிருப்பினும் திருமுறைகள் ஓதலாம். ஒலிநாடாக்களை உபயோகிப்பதில் தவறில்லை. நேரடியாகப் பாடுவது உத்தமம். பாடப்படும் திருப்பாடல்கள் இறப்புடன் தொடர்பான பாடல்களாக இருத்தல் நல்லது. பஞ்ச புராண வைப்பு முறையைப் பின்பற்றி ஓதிய பின்னர், திருப்புகழ், பட்டினத்தடிகள் பாடல்கள் முதலிய பாடல்களை ஓதலாம். **இசையோடு பாடவேண்டும் என்ற நியதி இல்லை. பயபக்தியோடு ஓதினால் போதுமானது.**

உடலை விட்டு உயிர் நீங்கியவுடன், உயிரானது சாதாரண கண்களுக்குத் தெரியாது ஆவி உடலோடு தனது பூத உடலை அண்மித்து நிற்கும் என்பது நம்பிக்கை. வானிலே கலந்து, வேறு உடலுடன் மீளப் பிறப்பதற்கோ, அல்லது இறைவனுடைய திருவடியிற் சேர்ந்து பிறவாமை எய்துவதற்கோ, குறைந்தபட்சம் முப்பது நாட்கள் தொடக்கம் ஒரு வருட காலம் எடுக்கும் என்பதும் நம்பிக்கை. எல்லா உயிர்களும் இறந்தவுடன் இறைவனைச் சேர்ந்தடைய மாட்டா. அவரவர் கர்மபலனின் படிதான் இறைவனை அடைவதும், மீளப் பிறப்பதும் நடக்கும் என்பதும் நம்பிக்கை. இருப்பினும் இறந்தவர்களுடைய உயிர்கள் எல்லாம் இறைவனைச் சென்றடைய வேண்டும் என்பதே உயிரோடிருக்கின்ற மற்ற எல்லோருடைய விருப்பமுமாக இருக்கிறது. இதனாலேயே, இறைபதம் எய்தினார், சிவபதம் அடைந்தார், என்று பொதுவாகச் சொல்கிறார்கள். இந்த நம்பிக்கைகளின் விளைவாக, இறந்த உயிரை இறைவனுடைய உணர்வோடு இருக்கச் செய்யவும், உலக வாழ்வு விரும்பத்தக்கதல்ல, இறைவனின் திருவடியே வேண்டத் தகுவது என்பதை உயிர் மறவாமல் இருக்கவும் உயிருக்கு உறுதுணை புரிவதற்காக இறுதிக் காலத்திலே திருமுறைகள் (இந்நூலின் பிற் பகுதியில் தரப்பட்டுள்ளன) ஓதும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

## 7. ஒப்பாரி வைத்தல் – குழறி அழுதல்

உயிர் அடங்கியபின், இறந்தவரின் குடும்பத்தவரும், நெருங்கிய உறவினரும் பிரிவாற்றாமையால் வாய்விட்டுக் குழறி அழுது அரற்றுவதைத் தடை செய்யற்க. உளவியல் முறையாக இது நடக்க வேண்டிய செயல். துக்கம் நீங்குவதற்கும் சுலபமான வழி.

**துக்கத்தை மனத்தில் அடக்கி வைத்துப் பேசாதிருப்போருக்கு மனநோய் ஏற்படவும் இடம் உண்டு.** இதனாலேயே, ஒப்பாரி வைத்து அழும் வழக்கம் முற்காலத்தில் இருந்து வந்தது. தற்காலத்தில் இதை நாகரீகம் அற்ற செயல் என்று கருதுகிறார்கள். இடம் பொருள் காலம் அறிந்து வாய் விட்டு அழுது புலம்புவதில் நன்மையே அன்றித் தீமை இல்லை. திருமுறைகளை ஓதும் போதும், சவக்கிரியை நடக்கும்போதும் அழுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

## 8. ஈமக்கிரியை

இறப்புக் காலங்களிலே செய்யப்படும் சடங்குகள் இரண்டு வகையான நம்பிக்கைகளின் பெயரில் செய்யப்படுகின்றன. ஒன்று, இறந்தவரின் குடும்பத்தினரும் உறவினரும் துக்கத்தில் இருந்து விடுபட்டு, வழமையான நிலைக்குத் திரும்ப வேண்டும் என்பதற்காகச் செய்யும் சடங்குகள். மற்றையது, இறந்தவரின் உயிர் இறைவனைச் சென்றடைந்து மீண்டும் பிறவாமை எய்த வேண்டும் என்ற நம்பிக்கையிற் செய்யப்படும் சடங்குகள். எனவே **ஈமக்கிரியையிலே மனோதத்துவமும், சமயநம்பிக்கையும் கலந்த சடங்குகள் இடம் பெறுகின்றன** என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

சைவர்கள் பாரம்பரீயமாக வாழ்ந்து வரும் நாடுகளிலே இந்தக் கிரியைகளைச் சைவக் குருக்கள்மார் செய்து வருகிறார்கள். அவர்களும் இடத்துக்கிடம் கிரியை முறைகளை மாற்றிச் செய்கிறார்கள். எப்படித்தான் வேறுபட்டாலும், அடிப்படைக் கொள்கைகள் மாறுபட்டதாகத் தெரியவில்லை. உயிரானது அமைதியும், நற்கதியும் அடைய வேண்டும் என்ற கொள்கை யிலேயே கிரியைகள் நடைபெறுகின்றன. புலம் பெயர்ந்த நாடுகளில் சைவக் குருக்கள்மார் கிடைப்பது அரிது. எனவே, **புலம் பெயர்ந்து வாழ்வோரில் சைவ ஒழுக்க நெறியில் நிற்பவர் எவராயிருந்தாலும் இந்தக் கிரியைகளைச் செய்யத் தயாராக இருக்கவேண்டும்.** ஆதியிலே சாதாரணமான மக்களே இவற்றை நடத்தினார்கள். புலம் பெயர்ந்த நாடுகளில் சைவசீலர்கள் இந்தச் சடங்குகளை நடத்த வேண்டிய கடமைப்பாடும், சமூகசேவைத் தேவையும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நூலிலே குறிப்பிடப்படும் கிரியை முறைகள், நான் பிறந்து வளர்ந்த யாழ்ப்பாணத்தில் எங்கள் குடும்பங்களில் நடந்த முறைகளை மனதில் வைத்தும், புலம் பெயர்ந்த நாடுகளில் நடைபெறுகின்ற சைவத் தொண்டர்கள் நடத்தும் கிரியைகளைக் கவனித்தும் எழுதப்பட்டுள்ளன. சில இடங்களிலே கால தேச நடைமுறைகளுக்கு அமைய சிறு மாற்றங்களைச் செய்திருக்கிறேன்.

முறையில் வித்தியாசம் இருப்பினும் அடிப்படைக் கொள்கைகள் விடுபடவில்லை என்பது எனது தெளிவு.

## 9. சுருங்கச் செய்து விளங்க வைத்தல்

கிரியைகளைச் சுருக்கமாகச் செய்து, பங்குபற்றுவோரும், பார்ப்போரும் விளங்கிக் கொள்ளும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். **இறந்தவரின் உடல் வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் அனைவரும் அமைதியாகவும், வீண்வார்த்தைகள் பேசாமலும் இருத்தல் வேண்டும்.** குறிப்பாகத் திருமுறைகள் ஓதப்படும் போதும், ஈமக்கிரியைகள் நடக்கும் போதும் இறைசிந்தனையில் இருத்தல் வேண்டும். பொதுவாகச் சைவர்கள் அனைவருக்கும் சிவபுராணம் தெரிந்த சிவ வணக்கம். அதனை எல்லோரும் சேர்ந்து ஓதினால் இறைசிந்தனையும், அமைதியும் உண்டாகும். இது இறந்தவருக்குச் செய்யும் பெருமதிப்பாகும்.

## 10. பிள்ளையார் வணக்கம்

எந்தக் கருமத்தைத் தொடங்கு முன்பும் பிள்ளையாருக்கு முதல் வணக்கம் செய்யும் வழக்கம் சைவர்களிடையே உண்டு. செய்யப்படுகின்ற கருமத்துக்குத் தடைகள் ஏற்படாமல் காக்கவல்ல கடவுள் பிள்ளையார் என்பது நம்பிக்கை. பிள்ளையாரை மண்ணினாலோ, மஞ்சள் மாவினாலோ அல்லது மாட்டுச் சாணத்தினாலோ பிடிக்கலாம். பிடித்த பிள்ளையாரின் உச்சியிலே அறுகம் புல்லைச் சூட்டுவது வழக்கமாகும். அறுகம்புல் உயிர்த் தன்மையுடையது, மங்கலகரமானது என்று பொருள் கொள்ளலாம். இறைவன் எப்பொருளிலும் இருக்கிறான் என்ற கொள்கையில் பிள்ளையாரின் எளிமையான உருவம் அமைகிறது எனவும் கொள்ளலாம்.

## 11. சிவ கும்பம் வைத்தல்

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில் களையும் புரியும் ஒரே இறைவன் சிவபெருமானே என்று சைவர்கள் நம்புகிறார்கள். அப்பெருமான் சிவமும் சக்தியுமாய் இணைந்து இருப்பதால் ஒரே கும்பத்தில் சிவமும் சக்தியும் எழுந்தருளும்படி ஒரு கும்பம் வைப்பது போதுமானது. இறந்தவரின் உடலைச் சிவமாக்கும் பொருட்டு இக்கும்பம் வைக்கப்படுகிறது. கும்பத்திலே சிவபெருமானை எழுத்தருளும்படி வேண்டுதல் செய்து, அப்பெருமான் கும்பத்தில் எழுந்தருளி இருக்கிறார் என்ற நம்பிக்கை யோடு கிரியைகளைச் செய்தல் வேண்டும். முதலில் உடலைச் சுத்தி செய்யும் கிரியைகளைச் செய்தபின் சிவபெருமானைப் பூசித்து உடலைச் சிவமயமாக்கும்படி வேண்டிக் கும்பத்து நீரை உடலிலே தெளித்துவிடும் போது உடல் சிவமாகிவிட்டது என்று கருதப்படுகிறது.

## 12. கொள்ளிக்குடம் வைத்தல்

இது மண்ணினால் ஆன சிறு பானையில் வைக்கப்படுகிறது. இந்தக் கும்பத்தில் இறந்தவரின் உயிரைத் தங்கும்படியும், அப்படித் தங்கிய உயிரை சிவபெருமானுடைய வேண்டுதலினால் மலநீக்கம் செய்தற் பொருட்டு இக்கும்பம் உதவுகிறது. தடுமாற்றம் அடைந்திருக்கும் உயிரை ஆறுதல்படுத்தி, இறைவன் தான் நித்தியமான பொருள், அவனிடத்திலே சேர வேண்டியதே உனது கடமை. கர்மபலன்களைப் பொடியாக்கி அந்தப் பெருமானை நாட ஆயத்தமாய் கும்பத்தில் வந்து நில் என்று வேண்டுதல் செய்வதற்கான அமைப்பு. இறந்தவரின் உயிரைச் சுடுகாடுவரை, சிவமாகிய உடலோடு இட்டுச் சென்று, அங்கே மூன்று முறைகள் இக்கும்பத்தில் ஓட்டை செய்து அதில் இருந்து ஓடும் கும்ப நீர் உடலிலே தெளிக்கப்படுகிறது. இறந்தவரின் உயிரில் உள்ள மண் ஆசை, பொன் ஆசை, பெண் (அல்லது ஆண்) ஆசை முதலிய ஆசைகள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டன, தூய்மையான உயிர் சிவமாகிய உடலில் கலக்கப்படுகிறது என்ற நம்பிக்கையில் இச்சடங்கு செய்யப்படுகிறது என்று கொள்ளலாம்.

## 13. தீ வளர்த்தல்

இறைவன் ஒளி வடிவினன். இயற்கையில் இந்த ஒளி வடிவைப் பிரதிபலிப்பது தீ. தீயை வளர்த்து, அதனைச் சிவாக்கினி என்று வழிபட்டு, அதனிடத்தே சகல பொருள்களும் அடங்கி ஒடுங்கும் என்றும், அது சுத்திகரிப்பின் சாதனம் என்றும் வழிபடும் வழக்கம் சைவ சமயத்தவரிடம் உண்டு. ஆகவே, இறுதிச்சடங்கின் போது அதனை வளர்த்து, சிவமாக்கிய உடலுடன் இதனைச் சுடலைக்கு எடுத்துச் சென்று உடலை எரிப்பதற்குப் பயன்படுத்துவது வழக்கம். தீக்கொள்ளியை கிரியை செய்யும் உரிமையாளர் சுடலையில், உடலைத் தீ மூட்டும் பொருட்டு எடுத்துச் செல்வர். அங்கே கொள்ளிக்குடம் உடைக்கப்பட்ட பின் உடலின் தலைமாட்டில் கொள்ளியை வைத்து விட்டு திரும்பிப் பாராமல் அப்புறமாவர்.

புலம் பெயர்ந்த நாடுகளில் இத்தீ வளர்ப்புச் சடங்கை மேற்கொள்வது கடினம். உடல் வைக்கப்படுகின்ற மண்டபங்கள் இதற்கான வசதிகளுடன் அமைக்கப்படுவதில்லை. பொது இடங்களிலே நெருப்பு மூட்டுவது பற்றிய சட்ட திட்டங்களும் மிகுந்த கடுமையாக உள்ளன. எனவே இந்த வழக்கத்தையும் ஒரு மாற்றப்பட்ட முறையாகவே செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே கொள்ளிக்குடம் வைக்கும்போது, அதன் அருகே ஒரு தட்டில் ஒரு கட்டு ஊதுபத்தியையும், ஒரு நெருப்புப் பெட்டியையும் வைத்து, கொள்ளிகுடத்துடன் சுடலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

உடலைத் தீக்கிரையாக்காத சைவ வழக்கமும் உண்டு. அவ்வகைப்பட்ட சந்தர்ப்பங்களிலே, இத்தீயை எடுத்துச் செல்லப்படும் சடங்கை விட்டு விடலாம்: அல்லது, இச்சடங்கைச் செய்த பின்னர் உடலை பூதானம் செய்யலாம்.

## 14. எண்ணெய் வைத்தல் – நீராட்டல்

இறந்தவரின் உடலைச் சுத்தம் செய்யும் முகமாகவும், குடும்பத்தவர்கள் உறவினர்கள் துக்கம் நீங்கும் பொருட்டும் இச்சடங்கு செய்யப்படுகிறது. கிராமப் புறங்களில் இச்சடங்கு உண்மையாகவே நடத்தப்படுகிறது. வீட்டு வளவில் பிரத்தியேகப் பந்தல் அமைத்து, அப்பந்தலில் உடலை வைத்து, உடலுக்குத் தலையில் எண்ணெய் வைத்து, அரப்பு, எலுமிச்சம்பழம் வைத்து, நீராட்டிப் புத்தாடை அணிவித்துப் பெட்டியில் வைத்துக் கிரியை நடக்கும் இடத்துக்கு எடுத்து வருவர். இந்தச் சடங்கை அப்படியே பட்டினங்களில் செய்ய முடியாது. எனவே உடலின் சுத்திகரிப்பும் அலங்காரமும் இறுதிச் சடங்குகளை நடத்த உதவும் வர்த்தக தாபனங்களிடம் விட்டு விடப்படுகின்றன. ஆனால் இச்சடங்கை ஒப்பனை முறையில் பட்டினங்களில் செய்கிறார்கள்.

## 15. சுண்ணம் இடித்தல்

இந்தச் சடங்கு சிவபெருமானுக்குச் செய்யப்படும் நம்பிக்கைச் சடங்கு. உடல் சுத்தி செய்யப்பட்டு, சிவகும்பத்தின் நீர் அதன் மேற் தெளிக்கப்பட்டுப் பிரேதம் சிவமயமாக்கப்பட்ட பின்னர் அது சிவபெருமானைப் பிரதிபலிக்கின்ற ஒரு ஒப்பனைப் பொருளாகக் கருதப்படுகிறது. எனவே, உயிரின் மலநீக்கத்தை முன்னிட்டுச் சிவபெருமானை வேண்டிச் சுண்ணம் இடிக்கப்படுகிறது. இது உயிரின் பாவங்களைப் பொறுத்து, அதைத் தூய்மை செய்து உமதண்டை சேர்த்துக் கொண்டருளும் என்று வேண்டுதல் செய்கின்ற ஓர் உபசாரக் கிரியையே. உடலின் கால்மாட்டிலே சிறு உரலை நிறுத்தி, அதனுள் **அறுகு, மஞ்சள், சிறிது பச்சை அரிசி** என்பனவற்றை இட்டு, கிரியை செய்யும் உரிமையாளரின் வலக்கையில் உலக்கையைக் கொடுத்து சுண்ணத்தை இடிக்கும்படி செய்வர்.

சுண்ணம் இடிக்கப்படும் போது மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த **திருப்பொற்சுண்ணப் பாடல்கள்** இருபதையும் பாடுவர். பாடி முடிந்த பின் இடிக்கப்பட்ட சுண்ணத்தை அள்ளிச் சிவமாய சவத்தில் கண்களில் சாத்துவர். இது, இறந்த உயிரின் பாவங்கள் பொடியாக்கப்பட்டு விட்டன, இனி அவ்வுயிருக்கு உமது ஞானஒளியை ஈய்ந்தருளும் என்று சிவபெருமானை வேண்டுதல் செய்கின்ற பொருளில் அமையும்.

திருப்பொற்சுண்ணப் பாட்டின் வரலாறு, தலைவனுக்குத் தலைவியும், தோழியரும் முழுக்காட்டும் பொருட்டுப் பாடிப்பாடி வாசனைப் பொருட்களைப் பொடி செய்ய உரலில் இட்டு இடித்த ஒரு வழக்கம். இந்த வழக்கத்தை மணிவாசகப் பெருமான் சிவபெருமானை நினைந்து செய்யும் செயலாகப் பாவனை செய்து, திருப்பொற்சுண்ணப் பாடல்கள் இருபதையும் பாடியருளினார். அதன் பின்னர் சைவ மக்கள் இத்திருப்பாடல்களை கோயில்களில் திருமுழுக்கின் போது பாடி வழிபாடுகள் செய்யலானார். திருமுழுக்குச் சுத்திகரிப்பைக் குறிப்பதோர் வழிபாடு. அந்த வகையிலே தான் இறுதிச்

சடங்கிலும், இறந்தவரின் உயிரின் பாவ நீக்கமும், மல நீக்கமும் வேண்டிச் செய்யப்படும் ஒரு சுத்திகரிப்புச் சடங்காகப் பாவனை செய்து நடத்தப்படுகிறது என்று கொள்ளலாம்.

இறுதிச் சடங்கின் போது சுண்ணம் இடிப்பதற்கு இறந்தவரின் ஆண் மக்களையே நியமிப்பது வழக்கம். **தாயாயின் கடைசி மகனும், தந்தையாயின் மூத்தமகனும் இடிப்பது வழக்கம்.** சில இடங்களில் ஆண் மக்கள் எல்லோருமே சேர்ந்து இடிக்கிறார்கள். பெண்பிள்ளைகள் இடிக்கக் கூடாதா என்ற கேள்வி எழுகிறது. ஆதியிலே பெண்கள்தான் சுண்ணம் இடித்த வழக்கம் இருக்கிறது. திருப்பொற்சுண்ணப் பாடல்களும் பெண்கள் பாடுவதாகவும், இடிப்பதாகவும் தான் பாடப்பட்டிருக்கின்றன. ஆனால், மரபு வழியாக இறுதிச் சடங்கில் ஆண்கள் தான் சுண்ணம் இடிப்பது வழக்கம்.

## 16. பந்தம் பிடித்தல்

பாவ நீக்கமும் மல நீக்கமும் வேண்டுதல் செய்யப்பட்ட பின்னர், திருவருள் கூட வேண்டும் என்பதற்காகப் பந்தம் ஏற்றப்படுகிறது. இவ்விடத்தும் ஒளி திருவருளின் ஒப்பனையாக அமைகிறது எனக்கொள்ளலாம். **இறந்தவரின் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ஆண், பெண் இருசாராரும் உடலைச் சுற்றி நின்று நெய்ப்பந்தம் பிடிப்பது வழக்கம்.** புலம் பெயர்ந்த நாடுகளில் மெழுகுதிரிகளைப் பந்தங்களுக்குப் பதிலாகப் பயன்படுத்துகிறார்கள். இதில் தவறில்லை. அடிப்படைக் கொள்கை ஒளி வேண்டும் என்பதே. செயல் முறைப்படுத்துவதற்கு மெழுகுதிரிகள் இலகுவானவை. இலகுவாகப் பெறக் கூடியவையும் ஆகும்.

## 17. மனமொத்த மலர் அஞ்சலி

இறுதிச் சடங்கு வைபவத்தில் கலந்து கொள்கின்ற அன்பர்கள் அனைவரும் இறந்தவரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டும் என்று மனதார வேண்டிக் கொண்டதன் நிறைவாகப் பூவினால் அஞ்சலி செய்வது வழக்கம். **இந்த நிகழ்ச்சியில் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.** அவரவர் இறைவனை மனதில் நினைத்து, இறந்தவரின் உயிரானது இறைவனுடைய அருளைப் பெறவேண்டும் என்று மனதார வேண்டுதல் செய்வதே இதன் நோக்கம்.

பூ இதழ்களையோ அல்லது பூக்களையோ ஒரு தட்டில் வைத்து, வந்திருப்போர் அனைவரையும் அன்புடன் அழைத்து, இந்த மலர் அஞ்சலியில் கலந்து கொள்ளச் செய்வர். இது இறந்தவருக்கும், அவருடைய குடும்பத் தவருக்கும் செய்யும் பெரிய மரியாதையாகும். இதனால் அஞ்சலி செய்வோரின் மனதில் ஆறுதலும், அமைதியும் ஏற்படும். இறுதியாக இறந்தவரின் உடலைப் பார்த்த மனநிறைவு ஏற்படும். எல்லோருடைய நல்லெண்ணங்களும் ஒருமித்த ஒரு அன்பு அலையை உண்டுபண்ணி, இறந்தவரின் ஆத்மாவுக்கு அமைதியைக் கொடுக்கும். குடும்பத்தவருக்கு ஆறுதலைத் தரும்.

இத்தருணத்தில், ஒருவரோ, அல்லது பலர் சேர்ந்தோ தேவாரங்களையும், திருவாசகப் பாடல்களையும், பட்டனத்தடியார் பாடல்களையும் பாடுவது வழக்கம். இதனால் பங்கு பற்றுவோர் யாக்கை நிலையாமையை உணரவும், மனம் இளகி இறைவனைத் தியானிக்க வேண்டும் என்ற எண்ணம் பெருகவும் ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. **மலர் தூவும் போது காலில் இருந்து தொடங்கித் தலை வரை தூவுவார்கள்.** பிரிந்த உயிரானது மேல் நோக்கிச் சென்று கடவுளை அடைய வேண்டும் என்பதை இது குறிக்கும்.

## 18. வாய்க்கரிசி இடுதல்

இந்தச் சடங்கைப் பலர் பிழையான விளக்கத்துடன் செய்கிறார்கள். அதாவது, இறந்தவருக்குத் தாம் உணவு ஊட்டுகிறோம் என்ற எண்ணத்துடன் செய்கிறார்கள். சவமானது சிவமாக்கப்பட்டு, மல நீக்கம் செய்யப்படும் வேண்டுதல் செய்யப்பட்டு, உயிரை உலகப் பிணிப்புகளை நாடாதே என்று கோரப்பட்ட பின்னர், நாம் நமது உறவினருக்கு உணவு ஊட்டுகிறோம் என்ற நினைப்போடு இச்சடங்கைச் செய்வது பொருத்தமாகாது. அப்படி என்றால் ஏன் வாய்க்கரிசி இடும் வழக்கம் வந்தது என்ற கேள்வி எழலாம்.

ஆதிகாலத்திலும், கிராமங்களில் இன்றும், வாய்க்கரிசி இடுவதற்கு பயன்படுத்தப்படும் பொருள் அரிசியல்ல. நெற்பொரியே ஆகும். இதிலே ஒரு பெரிய தத்துவம் அடங்கி உள்ளது. அதாவது, நெல்லானது விதை பொருள். அதனை விதைத்தால் முளைவிட்டு மீண்டும் வளர்ந்து பயிராகும். அத்தன்மையான நெல்லை வறுத்துப் (பொரித்து) பொரியாக்கிவிட்டால் அந்த நெற்பொரி மீண்டும் முளைக்கப் போவதில்லை. இந்த உண்மையைப் பாவனையாக வைத்துத்தான், **இறந்து பட்ட உயிர் மீண்டும் பிறவாது இருக்க வேண்டும்** என்ற நம்பிக்கையில் நெற்பொரியை வாயில் இட்டார்கள். உறவினர்கள் இப்படிப் பொரியை இடும்போது, எம்மை விட்டுப் பிரிந்த இந்த உயிரானது மீண்டும் பூமியில் பிறவாதிருக்க அருள்புரிவாய் இறைவா என்ற வேண்டுதலோடுதான் இச்சடங்கினைச் செய்தல் வேண்டும்.

இதற்கு இன்னும் ஒரு பொருள் கொள்ளலாம். உயிரை ஒளிபெற விடாது மறைப்பன, ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்கள். நெல்லிலே மேலே மூடியிருக்கின்ற உமியை ஆணவத்துக்கும், உள்ளே அரிசியை மூடியிருக்கிற தவிட்டை கன்மத்துக்கும், அரிசியாய் இருக்கும் மாப்பொருளை மாயைக்கும் ஒப்பிடலாம். நெல்லைச் சிவனருள் என்கின்ற நெருப்பிலே வறுக்கின்ற போது, விளைவை உண்டுபண்ணுகிற உமியும், தவிடும், அரிசியும் வெந்து, தூய்மையான வெண்ணிறமான பொரியாகிய மீண்டும் பிறவாமை எய்திய உயிராக மாறுகின்றது, எனவே இறந்தவர் பிறவாமை எய்தவேண்டும் என்பதே இச்சடங்கின் உட்கருத்தெனக் கொள்ளலாம்.

நெல்லைப் பொரியாக்குவதும், பட்டினங்களில் நெல்லைப் பெறுவதும் சிரமமான வேலை. ஆகவே இலகுவில் பெறக்கூடிய அரிசியை நெற்பொரிக்குப் பதிலாகப் பயன்படுத்துகிறார்கள். அரிசியும் மீண்டும் முளைக்க முடியாத

பொருள் என்பதை மனத்தில் கொண்டால் அரிசியை உபயோகம் செய்வதில் தவறில்லை. இந்தச் சடங்கில் இறந்தவரின் மிக நெருங்கிய உறவினர்களே கலந்து கொள்வர். **வாய்கரிசி இட்டவர்கள் 31 நாள்வரை கடைப்பிடிக்க வேண்டிய துக்க நடைமுறைக் கடமைகள் சில உண்டு. அந்தக் கடமைகளை நிறைவேற்ற வசதியில்லாதவர்கள் இச்சடங்கில் கலந்து கொள்வது வழக்கம் அல்ல.**

## 19. பெட்டி மூடப்படுதல்

கிராமங்களிலும் முற்காலத்திலும் வீட்டிலே மூடப்பட்ட பெட்டி சுடுகாட்டிலே திறக்கப்பட்டது. அங்கேதான் ஆண்கள் வாய்க்கரிசி இடுவார்கள். உடலில் உள்ள ஆபரணங்கள் அங்கேதான் அகற்றப்பட்டன. இவை நடந்தபின் தான் கொள்ளிக்குடம் உடைக்கப்பட்டுத் தீ இடப்பட்டது. முற்காலத்தில் ஆண்கள் மட்டும் தான் சுடலைக்குப் போனார்கள். பெண்கள் சுடலைக்குப் போவது வழக்கம் அல்ல. தற்காலத்தில் இந்த வழக்கம் மாறிவிட்டது. பட்டினங்களிலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் சுடலைகள் காடுகள் அல்ல. நவீன சாதனங்களும், மண்டபங்களும் இருக்கின்றன. ஆகவே, ஆண், பெண் இருதரப்பினரும் சுடலைகளுக்குச் செல்கிறார்கள். எனவே, தீயிடுவதைத் தவிர்ந்த, உடலோடு தொடர்பான சகல சடங்குகளையும் வீட்டிலேயே வைத்து விடுவது வசதியும், சிறப்பும் ஆகும். ஆகவே பெட்டி மூடுவதற்கு முன்னர், உடலில் உள்ள நகை, நட்டுகளைக் கழற்றி விடுவது நல்லது. இதனை குடும்பத்தோடு நெருங்கிய தொடர்பு உள்ள ஒருவர் செய்யலாம். கழற்றப்படும் பொருட்களை அதற்கு உரியவர்களிடம் ஒப்படைப்பது கழற்றுகிறவரின் பொறுப்பு.

இவ்விடத்தில் ஒரு குறிப்புக் கூறவேண்டி உள்ளது. அதாவது, திருமணமான தம்பதியரில் கணவன் இறந்தால், மனைவி தனது கழுத்தில் உள்ள தாலியைக் கழற்றிக் கணவனின் உடலின் நெஞ்சின் மேல் வைக்கும் ஒரு வழக்கம் உண்டு. இது உடற்சுத்தி செய்த பின்னர் நிகழ்வது. பெண்கள் தாலியை அணிவது திருமணமானவர்கள் என்பதை வெளிப்படுத்துவற்கே. முற்காலத்தில் திருமணத்தன்று கணவனால் கட்டப்பட்ட தாலியை எக்காரணம் கொண்டும் கழுத்தை விட்டுக் கழற்றுவதில்லை. கணவன் இறந்தபின் அவனாற் கட்டப்பட்ட தாலியை அணிவதற்குத் தகுதியற்றவள் என்று கருதப்படுகிறது. எனவே, கணவன் இறந்தவுடன் பெண் தன் கழுத்தில் உள்ள தாலியைக் கழற்றி விடுகிறாள். தாலி **அணியும் நிலை அற்றுப்போய் விட்டதே என்ற துக்கத்தில் அவன் அணிவித்த தாலியைக் கழற்றி அவன் உடலில் வைக்கிறாள்.** இந்தச் சடங்கை, பின்னர் பெண் திருமணம் செய்து கொள்வாளோ அல்லது தனித்தே வாழ்க்கை நடத்துவாளோ என்பதைக் காட்டுகின்ற அறிகுறியாக எடுக்கக்கூடாது. தாலியின் பெருமையைக் காட்டுகின்ற ஒரு சடங்காக எடுக்க வேண்டும். பின்னர் திருமணம்

செய்துகொள்வதா விடுவதா என்ற தீர்மானத்தை இதிலே போட்டுக் குழப்புவதும் உண்டு. அது தேவையற்றது.

தாலி கணவன் மனைவியரின் பிணிப்புக்கு நீக்கமற நிறைந்த ஓர் அத்தாட்சி, அடையாளம். அந்த அடையாளத்தின் சிறப்பு, **என்வாழ்வில் இக்கணவனுடன் அவன் இறக்கும் வரை நிலைத்திருந்தது** என்பதை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாக எடுத்துக்கொள்வது உத்தமம்.

## 20. தீயிடும்போது, நகைகள் இருத்தல் ஆகாது

உடலுக்குத் தீயிடும் போது உடலிலே எந்தவித நகைகளும் இருக்கக் கூடாது என்ற ஒரு நம்பிக்கை உண்டு. சிலர் சில நகைகளைக் கழற்றாமல் விட்டுவிகிறார்கள், அது இறுதிச் சடங்குகளின் உட்கருத்துக்கு மாறான செயலாகும். ஆசைகளை விட்டுவிடல், அனைத்தையும் துறந்த நிலை, என்பனவற்றை ஒப்பனையாகக் கொண்ட சடங்குகளைச் செய்துவிட்டுப் பின்னர் நகைகளைக் கழற்றாமல் விட்டுவிடுவது சரியல்ல. அதனாற்தான் இந்த நம்பிக்கை ஏற்பட்டிருக்கலாம். எனவே இந்த நம்பிக்கையைக் கடைப்பிடிப்பது உத்தமம்.

## 21. இறந்தவரின் ஆவிக்குப் பயப்படுதல்

இறந்தவரின் ஆவி நமக்குத் துன்பம் செய்யுமோ, கேடு விளைவிக்குமோ என்று சிலர் பயப்படுவதுண்டு. இது அர்த்தம் அற்றது. ஆவி உடலில் இருக்கும் உயிருக்கு ஐம்பொறிகளின் துணை இல்லை. ஐம்புலன்களும் அதில் அமிழ்ந்திருந்தாலும், அது ஆவிநிலையில் இருக்கும் போது பூவுலகுக்கு உரிய தன்மை அதனிடம் இல்லை. அது ஆவி உலகையே நாடி நிற்கும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நமது மனப்பயத்தால் ஏற்படும் துன்பங்களை நாம் ஆவி துன்புறுத்துகிறது என்று எண்ணுகிறோம். ஆவி நிலையில் உள்ள உயிர்களை நாம் மண்ணுலகச் சூழலுக்கு இழுத்து ஈடுபடுத்தாமல் விட்டுவிட்டால் அவை நமக்குத் துன்பம் தரப்போவதில்லை. விண்ணுலகம் சென்று இறைபதம் எய்துக என்று அறிவுறுத்திவிடின் நாம் ஆவிகளுக்குப் பயப்பட வேண்டியதில்லை.

# இறுதிச் சடங்கு செய்யும் நடைமுறைகள்

## 1. பிள்ளையார் பிடித்தல் – சிவகும்பம் வைத்தல்

ஈமக்கிரியையை நடத்துபவர் உடலுக்கு அண்மையில் அமர்ந்து, ஒரு தலை வாழை இலையிட்டு, மஞ்சள் மாவினாலோ, அல்லது அரிசி மாவினாலோ பிள்ளையார் பிடித்து, அறுகம்புல் உச்சியிற் சூட்டிவைத்தல்.

இலையிலே பச்சை அரிசி சிறிதளவு இட்டு அதன்மேல் செம்பிலோ, அல்லது சிறு குடத்திலோ நிறைய நீர்விட்டு, முடியுள்ள தேங்காய் நிறுத்தி, மாவிலை மூன்று பக்கமும் சொருகிக் கும்பத்தை நிறுத்திக்கொள்ளவும். சொருகப்படும் **மாவிலைகளின் எண்ணிக்கை மூன்றாக இருக்கவேண்டும்.** கும்பத்துக்குப் பூ, பூமாலை, திருநீறு, சந்தனம், குங்குமம் சாத்துக. குத்துவிளக்கு ஒன்று ஏற்றி வைக்கவும். சிவகும்பத்தின் முன்னே ஒரு பாத்திரத்தில் பன்னீர் கலந்த நீர் எடுத்து வைத்துக் கொள்க. கும்பபூசை செய்யும் போது, இந்த நீருக்கும் சேர்த்துப் பூசை செய்க. உடலுக்குத் தெளிக்கும் கும்பநீராக இந்த நீரையே பயன்படுத்துக. எல்லாச் சடங்குகளும், வழிபாடுகளும் நிறைவு பெறும்வரை சிவகும்பத்தைக் கலைத்தலாகாது.

## 2. கொள்ளிக்குடம் வைத்தல்

சிவகும்பத்தின் அருகே இன்னும் ஒரு தலைவாழை இட்டு அதன்மேல் சிறிதளவு பச்சை அரிசி இட்டு, மண்ணாலான சிறு பானையில் நிறைய நீர் விட்டு மூன்று மாவிலை தேங்காய் வைத்துக் கும்பத்தை நிறுவிக் கொள்ளவும். ஒரு தட்டிலே, ஒரு கட்டுச் சாம்பிராணிக் குச்சிகளையும், ஒரு நெருப்புப் பெட்டியையும் வைத்துக் கொள்ளிக்குடத்துக்கு அருகே வைத்துக் கொள்ளவும்.

## 3. பூசை ஆரம்பம்

பூசை ஆரம்பமாகிறது என்பதை அறிவிக்க கைமணியை அடித்து விட்டுத் திருநீற்றை எடுத்து, சிவசிவ என்று சொல்லி நெற்றியில் அணிந்து கொள்க. கிரியை செய்கின்ற உரிமையாளரை அழைத்து, அருகில் இருத்தி, சிவசிவ என்று சொல்லித் திருநீறு கொடுத்து அணியச் செய்க. உரிமையாளரிடம் பின்வரும் உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

**உறுதிப்பாடு: “எம்மை விட்டுப் பிரிந்த எனது (உரிமை முறை) உடைய ஆத்மா நற்கதி அடையும் படிக்கும், சாந்தி பெறுதற் பொருட்டும் இந்த இறுதிச் சடங்குகளைச் செய்ய முன்வந்துள்ளேன். இந்தச் சடங்குகள் நிறைவு பெறும் வரைக்கும், பயபக்தியாகவும், கண்ணும் கருத்தாகவும், அமைதியாகவும் இருந்து சடங்குகளை நிறைவேற்றுவேன் என்று உறுதியளிக்கிறேன்.”** என்று உரிமையாளர் உறுதி கூறியபின் சிவகும்பத்துக்குத் தீபம் காட்டுக. பின்னர், உரிமையாளருக்குத் திருநீறு கொடுத்து அணியச் செய்யவும். *(மேற்கண்ட உறுதிப்பாட்டின் வெளிப்பாடாக ஒரு வெள்ளை நூலை கிரியை செய்யும்*

*உரிமையாளரின் இடது பாரிசத்தில் அணியச் செய்வது வழக்கம். தற்காலத்தில் இதனைத் தவிர்ப்பவர்களும் உண்டு).*

## 4. பிள்ளையார் பூசை

முதலில் பிள்ளையாரை மனத்தில் நினைத்து இந்தக் கிரியையைக் குற்றம், குறையில்லாது நிறைவு செய்து தருக என்று வேண்டுதல் செய்க. பின்வரும் பாடல்களைப் பாடிப் பூவும், நீரும் இட்டு வணங்கவும்.

திருச்சிற்றம்பலம்

**பிடியதன் உருஉமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்**
**கடிகண பதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!**

**மண்ணுல கத்தினிற் பிறவி மாசற**
**எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்**
**கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்**
**பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.**

திருச்சிற்றம்பலம்

இத்தேவாரங்களைப் பாடி முடிந்தபின், பூ இட்டுக் கற்பூரத் தீபம் காட்டுக.

## 5. சிவபெருமானுக்குப் பூசை

சிவகும்பத்திலே சிவனும் சக்தியும் எழுந்தருளும்படி வேண்டுதல் செய்தல். மனத்தால் தியானித்துப் பூவும், நீரும் இட்டபின், பின்வரும் வேண்டுதலை உரத்துச் செய்க.

**1. எல்லாம் வல்ல சிவபெருமானே, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனப்படும் ஐந்தொழில்களையும் நீரே புரிகிறீர் என்று நாம் நம்புகிறோம். அம்மை அப்பராக, எம்பெருமான் இந்தக் கும்பத்தில் எழுந்தருளி அருள் புரிய வேண்டும் என்று அன்பினால் அகம் குழைந்து இறைஞ்சுகிறேன்.**

**2. இந்த உடலை விட்டுப் பிரிந்த உயிரானது நற்கதி அடைய வேண்டும் என்று இந்தக் கிரியையை ஆரம்பிக்கிறேன். இறந்தவரின் குடும்பத்தினரும், நண்பர்களும் துக்கத்தினின்றும் மீண்டு, தமது வழமையான நிலைக்குத் திரும்ப வேண்டும் என்று அகம் குழைந்து இறைஞ்சுகிறேன்.**

வேண்டுதலின் பின்னர் சிவபெருமானுக்கு அர்ச்சனையாகப் பின்வரும் தேவாரங்களைப் பாடிப்பாடிப் பூவும் நீரும் இடுக.

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே!

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானைப்
பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை மந்திரமும்
தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேரானைப்
போற்றாதே ஆற்றநாட் போக்கினேனே!

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

கற்றவர்கள் உண்ணுங் கனியே போற்றி
கழல் அடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பிலா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சின் இடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

இந்தத் தேவாரங்களைப் பாடி முடிந்தபின் கும்பத்துக்குக் கற்பூரத் தீபம் காட்டுக. இந்த நேரம் தொடக்கம், கும்பநீர் உடலில் தெளிக்கப்படும் வரை, சிவபெருமான் கும்பத்தில் எழுந்தருளி இருக்கிறார் என்ற பயபக்தியுடன் தொழிற்பட வேண்டும்.

## 6. கொள்ளிக்குடப் பூசை

கொள்ளிக் குடத்துக்குப் பூவும், நீரும் இட்ட பின்னர், சிவபெருமானைத் தியானித்து இறந்தவரின் உயிரை இக்கும்பத்தில் எழுந்தருள உதவும்படி வேண்டுதல் செய்யவும். பின்னர் கற்பூரத் தீபம் காட்டுக. பின்னர் இறந்தவரின் உயிர் கொள்ளிக் குடத்தில் எழுந்தருளி இருப்பதாகப் பாவனை செய்து அவ்வுயிருக்குத் துணை புரியும் முகமாக, உலக பந்தங்களை விட்டு, இறைவனுடைய திருவடிகளை நாட ஆயத்தமாகும் படியும் வேண்டுதல் செய்த பின் பின்வரும் தேவாரங்களைப் பாடுக. பாடும் போது கும்பத்துக்குப் பூவும், நீரும் இடுக.

திருச்சிற்றம்பலம்

கருவாய்க்கிடந்துன் கழலே நினையும் கருத்து உடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமஎன்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபாதிரிப்புலியூர் அரனே.

படைக்கல மாகஉன் நாமத் தெழுத்தைஞ்சென் நாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப்பும் உனக்கு ஆட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறு அணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணி தில்லைச் சிற்றம்பலத் தரனே.

கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும்நானும் கிடந்தலந்து எய்த்தொழிந்தேன்
திருவெற்றி யூரா! திருவாலவாயா! திருவாரூரா!
ஒருபற்றிலாமையுங் கண்டிரங்காய் கச்சி ஏகம்பனே.

இத்தேவாரங்களைப் பாடி முடிந்தபின் கொள்ளிக் குடக்துக்குக் கற்பரத் தீபம் காட்டுக.

## 7. எண்ணெய் வைத்தல்

ஒரு சிட்டியில் சிறிதளவு நல்லெண்ணெய் எடுத்துக் கொள்க. அதனுள் ஒரு மாவிலையை வைத்துக் கொள்க. எண்ணெய் வைக்க விரும்பும் உற்றார் உறவினரை அழைத்து, ஒவ்வொருவராக வரிசையில் வந்து மாவிலையால் எண்ணெயைத் தொட்டுப் பிரேதத்தின் தலையில் வைக்கும்படி செய்க. **கிரியை செய்ய உரிமையானவரை இறுதியில் வைக்கும்படி செய்க.** எண்ணெய் வைத்து முடிந்தபின், குடும்பத்தவரை எலுமிச்சம்பழம், தோடம்பழம், மாதுளம்பழம்,

கரும்பு முதலியவற்றின் சாற்றைப் பிரேதத்தின் தலையில் வைக்கச் செய்க. (பூசை தொடங்கு முன் ஒரு தட்டில் இவற்றைச் சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்க. சாறு விட்டவர்கள் கை அலம்புவதற்கு அருகே ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் வைத்துக் கொள்க).

## 8. நீராட்டல்

பூசை தொடங்கு முன் ஒரு பாத்திரத்தில் சுத்தமான தண்ணீர் எடுத்து வைத்துக் கொள்க. அந்த நீரை, ஒரு மாவிலையால் தொட்டு, குடும்பத்தவரை ஒவ்வொருவராக வைக்கும்படி செய்க. **கடைசியாக, கிரியை செய்யும் உரிமையாளரை வைக்கச் செய்க.** எல்லோரும் நீர் வார்த்து முடிந்தபின், சிவபெருமானை மனத்தில் தியானித்து இறந்தவரின் உடலில் எழுந்தருளும்படி வேண்டுதல் செய்க. சிவகும்பத்துக்குக் கற்பூர தீபம் காட்டியபின், கும்பநீரை மாவிலையால் தொட்டுப் பிரேதத்தின் உச்சியிருந்து உள்ளங் கால்வரை தெளித்து விடுக. அதன் பின்னர், சிவமாகிய சவத்துக்குத் திருநீறு சாத்திப் பூமாலை அணிவித்து, சந்தனம், குங்குமம் சாத்தும்படி செய்க. இப்போது **சிவமாகிய சடலத்துக்குக்** கற்பூர தீபம் காட்டும்படி செய்க.

## 9. பந்தம் பிடித்தல்

முன்னரே ஒழுங்கு செய்து வைக்கப்பட்ட மெழுகுதிரிகளை ஏற்றிப் பேரப் பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அனைவரையும் சுற்றி நின்று பிடிக்கச் செய்க.

## 10. சுண்ணம் இடித்தல்

சுத்தமான ஒரு சிறு உரலையும், உலக்கையையும் முன்னரே ஆயத்தம் செய்து வைத்துக் கொள்க. உரலில் ஒரு மாவிலையும், உலக்கையில் ஒரு மாவிலையும் கட்டிவிடுக, உரலுக்கும் உலக்கைக்கும் திருநீறு, சந்தனம், குங்குமம் சாத்துக. உரலைக் கால்மாட்டில் நிறுத்தி, அதனுள் மஞ்சள், அறுகு, சிறிது பச்சை அரிசி இடுக. உலக்கையைக் கிரியை செய்யும் உரிமையாளரின் வலக்கையில் கொடுத்து உரலினுள் வைக்கச் செய்க. இப்போது, மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த திருப்பொற்சுண்ணப் பாடல்கள் இருபதையும் பாடி **ஒவ்வொரு பாடல் முடிந்ததும், உலக்கையைத் தூக்கி இடிக்கும்படி செய்க.** பாடல்கள் ஒவ்வொன்றும் முடியும் போது சிவமாகிய சவத்துக்குத் கற்பூர தீபம் காட்டிக் கை மணியை ஒலிக்கவும்.

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநற் தாமம் பூமாலைதூக்கி
    முளைக்குடம் தூபநற் தீபம்வைமின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
    நாமக ளோடு பல்லாண்டிசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
    கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி
    ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
    பொற்திருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகிர் அன்னகண்ணீர்
    வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
    குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
    செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந்து மெழுகித்
    தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
    எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன்தன்பெருமான்
    ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆழுமை யாள்கொழுநற்
    கேய்ந்தபொற் சண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
    காம்பணி மின்கள் கறையுரலை
நேசம் உடைய அடியவர்கள்
    நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங்கச்சித்
    திருஏகம்பன் செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
    பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப்பார் அயனும் அரியும்
அன்றிமற்று இந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
முறுவற் செவ்வாயினீர் முக்கணப்புக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சுவார் பெரியர்
உலகமெலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகம் தோள்வளை ஆர்ப்பவார்ப்ப
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்மை ஆர்ப்பவார்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7

வாள்தடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம் பிரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்

செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தம் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையோடு ஆடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாஎறிப்ப
வாய்திறந் தம்பவளம் துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள்அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமயன் எம்மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்திருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
    தாழ்குழல் சூழ்தரு மாலைஆடச்
செங்கனி வாயிதழுந் துடிப்பச்
    சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராவிரைக்கும்
    கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
    பொற்திருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
    நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
    சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
    கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
    பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
    ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
    செம்மலர்ப் பாதங்கள் காட்டும்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
    சிவபெரு மான்புரம் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
    செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
    சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
    மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
    உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
    பொற்திருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
    அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
    காலனைக் காலால் உதைத்தல்பாடி

இயைந்தன முப்புரம் ஏய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டரகள் வாழும்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருள் ஆயினார்க்கு
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்கு
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்கு
பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்

## 11. சுண்ணம் சாத்துதல்

கிரியை செய்யும் உரிமையாளரை உரலில் உள்ள **சுண்ணப் பொடியை அள்ளி சடலத்தின் கண்கள் இரண்டிலும்** வைக்கும்படி செய்க.

## 12. பஞ்ச புராணம் ஓதல்

பின்வரும் பஞ்சபுராணத்தை ஓதுக.

# பஞ்ச புராணம்

## தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கேதந்து
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமாநின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன்உன்னை
எங்குற்றாய் என்றபோதால் இங்குற்றேன் என்கண்டாயே.

## திருவாசகம்

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதற்கு என்கடவேன்
வானேயும்பெறில்வேண்டேன்மண்ணாள்வான்மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமேயோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக்கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனேஉன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்றது ஆர்பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பிறவியலை ஆற்றினில் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் அலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறிவார் குணக் கடலோனே
குறுமுனிவன் ஏத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்

## 13. பூவாஞ்சலி

ஒரு தட்டில் பூவோ அல்லது பூவிதழோ எடுத்து வைத்துக் கொள்க. இறுதியாக மலர் அஞ்சலி செய்ய விரும்புவோரை அழைத்து ஒவ்வொருவராக வரிசையில் வந்து மலரிடும்படி வேண்டுக. **கடைசியாகக் குடும்பத்தவரை மலரிடச் செய்க. கிரியை செய்யும் உரிமையாளரை சிவபெருமானை நினைந்து இறந்தவருடைய உயிருக்கு நற்கதி கொடுக்கும்படி வேண்டி நிலத்தில் வீழ்ந்து வணங்கும்படி செய்க.** (இவ்வேளையில் பட்டினத்தடிகள் பாடல்களை ஓதல் பொருத்தமாய் இருக்கும்).

## 14. வாயக்கரிசி இடல்

தட்டொன்றில் பச்சை அரிசி எடுத்து வைத்துக் கொள்க. வந்திருக்கும் உரிமைக் காரரை அழைத்து, இறந்தவரின் ஆத்மா மீண்டும் பிறவாமை எய்த வேண்டும் என்று வேண்டுதல் செய்து உடலின் வாயில் சிறிதளவு அரிசியை இடும்படி சொல்லுக. **குடும்பத்தவர்களை முதலில் இடச் செய்து பின்னர் கிரியை செய்யும் உரிமையாளரைக் கடைசியாக இடச் செய்க.** எல்லோரும் வாய்க்கரிசி இட்டு முடிந்தபின் கும்பத்துக்குத் தீபம் காட்டி சிவபெருமானை வேண்டுதல் செய்து கும்பத்தைக் கலைத்து நிகழ்ச்சியை நிறைவு செய்க. பின்னர் பூசைக்குப் பயன்படுத்திய பொருள்களை அப்புறப்படுத்துக.

## 15. பெட்டி மூடுதல்

இப்போது சடலத்தில் உள்ள நகைகளைக் கழற்றி உரியவர்களிடம் கொடுக்கும்படி பொறுப்பான ஒரு உறவினரிடம் பணிக்கவும். நகைகள் கழற்றப்பட்ட பின் இறுதிச் சடங்குக்குப் பொறுப்பாய் உள்ள வர்த்தக நிலையப் பிரதிநிதியிடம் பெட்டியை மூடிப் பிரயாணத்துக்கு ஏற்றவை செய்யும்படி வேண்டுக. கொள்ளிகுடம், ஊதுபத்தி, நெருப்புப் பெட்டி முதலியவற்றை கிரியை செய்யும் உரிமையாளருடன் பிரேத வண்டியில் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்கு செய்க.

## 16. சுடுகாட்டை அடைதல்

பிரேத வாகனம் சுடுகாட்டை அடைந்ததும், பெட்டியை இறக்கி மண்டபத்துள் வைக்கும்வரை திருவைந்தெழுத்து மந்திரத்தை ஓதுக.

திருச்சிற்றம்பலம்

ஓம் நமச்சிவாய சிவாய நமஓம், சிவாய நமஓம் நமச்சிவாய
சிவசிவ சிவசிவ சிவாய நமஓம், சிவாய நமஓம் நமச்சிவாய
சிவசிவ சிவசிவ சிவாய நமஓம், சிவாய நமஓம் நமச்சிவாய.
ஓம் நமச்சிவாய சிவாய நமஓம், சிவாய நமஓம் நமச்சிவாய
சிவசிவ சிவசிவ சிவாய நமஓம், சிவாய நமஓம் நமச்சிவாய
சிவசிவ சிவசிவ சிவாய நமஓம், சிவாய நமஓம் நமச்சிவாய.

## 17. பெட்டியை மண்டபத்துள் வைத்தபின் பஞ்சபுராணம் ஓதுக

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தன்னைச் சரண் என்றுதாள் அடைந்தேன் தன் அடியடையப்
புன்னைப் பொழில் புகலூர் அண்ணல் செய்வன கேள்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து என்வினைக் கட்டறுத்து ஏழ் நரகத்து
என்னைக் கிடக்க வொட்டான் சிவ லோகத் திருத்திடுமே.

### திருவாசகம்

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவதினியே.

### திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள் நாயகனே போற்றி ஏழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி.

### திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றமுற்றும்
எமக்குஅமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண்டு ஆருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

### பெரியபுராணம்

அண்ணலே என்னை ஆண்டுகொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்து அருள்புரி வேதநாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள்புரியெனப் பணிந்தார்.

### திருப்புகழ்

இருவினையின் மதி மயங்கித் திரியாதே
எழுநரகில் உழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாலே
பரவு தரிசனையை என்றெற் கருள்வாயே
தெரிதமிழை உதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியும் அன்பர்க் கெளியோனே
கனகசபை மருவுகந்தப் பெருமாளே.

## 18. கொள்ளிக் குடம் உடைத்தல்

பஞ்சபுராணம் ஓதிய பின்னர் கொள்ளிக் குடத்தைக் கிரியை செய்யும் உரிமையாளரின் வலப்புறத் தோளில் வைத்து இடக்கையால் குடத்தைப் பிடித்துக் கொள்ளும்படி செய்க. வலக்கையிலே ஊதுபத்திக் கட்டைக் கொழுத்திக் கொடுக்க. இப்போது பெட்டியை மூன்று முறை வலம் வரும்படி செய்க. கால்மாட்டில் இருந்து தொடங்கி ஒவ்வொரு முறையும் தொடங்கிய இடத்துக்கு வரும்போது, ஒரு கைக்கத்தியால் குடத்தில் தட்டுக. தட்டும்போது **"ஆசை அறுமின்"** என்று உரச்துச் சொல்லுக. மூன்று முறையும் சுற்றி வந்த பினனர், குடத்தைச் சரித்து, அதில் உள்ள நீரை மாவிலையால் தொட்டு **"சிவத்தை அடைமின்"** என்று உரத்து மூன்று முறைகள் சொல்லிப் பெட்டியின் மேல் தெளித்து விடுக.

பின்னர் பானையையும் நீரையும் பிறிதொருவரிடம் கொடுத்து மண்டபத்துக்கு வெளியே உடைக்கச் செய்க. அப்படி உடைத்த ஓடுகளை

அப்புறப்படுத்தி விடுக. கொள்ளிக்குட நீரைத் தெளித்த பின்னர், உரிமையாளர் கையில் வைத்திருக்கும் ஊதுபத்தி நெருப்பைப் பெட்டியின் மேல் வைக்கச் செய்து விட்டுத் திரும்பிப் பாராமல் மண்டபத்து வாயிலுக்குச் சென்று நிற்கும்படி செய்க. பெட்டியைக் காளவாயில் இடுகின்ற கருமத்தைப் பொறுப்பாயிருக்கும் வர்த்தக தாபனத்திடம் விட்டுவிடுக. இப்போது பின்வரும் பாடல்களைப் பாடிக் கிரியையை நிறைவு செய்க.

**முன்னை இட்டதீ முப்புரத்திலே**
**பின்னை இட்டதீ தென்னிலங்கையிலே**
**அன்னை இட்டதீ அடிவயிற் றிலே**
**யானும் இட்டதீ மூழ்கமூழ்கவே.**
**ஊன் அடைந்த உடம்பின் பிறவியே**
**தான் அடைந்த உறுதியைச் சாருமால்**
**தேன் அடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்**
**மா நடஞ்செய் வரதர்பொற் தாள்தொழ.**

## 19. சாம்பல் கரைத்தல்

மயானப் பொறுப்பாளர் சாம்பலைத் தரும் நாளை அறிந்து அதைப் பெற்று, அங்கிருந்தே ஒரு ஆறு அல்லது கடல் நிலையை அடைந்து கிரியை செய்த உரிமையாளரைக் கொண்டு நீரில் சாம்பலைக் கரைத்து விடுக. நீரில் கரைக்கும் போது பின்வரும் திருப்பாடல்களைப் பாடுக.

திருச்சிற்றம்பலம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்தருள் செய்பாதிரிப் புலியூர்
செழுநீரப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியை எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ணிலேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போது உணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம் புகலூர் மேவிய புண்ணியனே.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளாரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னம்பலவர்
அடிசார்ந்து உய்வமென்று அறிவார் இல்லையே.

உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நிலவுலாவிய நீர் மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

திருச்சிற்றம்பலம்

## 20. சுடலையில் இருந்து வீடு திரும்புதல்

கிரியை செய்த உரிமையாளர் வீடு திரும்பியதும் **வாசலிலே ஒரு உலக்கையோ அல்லது கரிக்கட்டியால் கீறப்பட்ட கோட்டையோ தாண்டிச் செல்லும்படி செய்க.** அப்படியே குளியல் அறைக்குச் சென்று, முழுகித் தூய ஆடை அணிந்து திருநீறு தரித்து வரும்படி செய்க. வீட்டில் உள்ள எல்லோரும் தோய்ந்து, குளித்து, வீட்டைக் கூட்டித் துப்புரவு செய்து சாம்பிராணிப் புகையிடுக.

## 21. நீர் வைத்து விளக்கு ஏற்றல்

வீட்டில் வசதியான ஒரு இடத்தில் (இறந்தவர் இருந்த அறையோ, அல்லது வரவேற்பு அறையோ, எதுவாயினும் பாதகமில்லை) ஒரு குத்துவிளக்கை ஏற்றி, அதனருகே ஒரு பாத்திரத்தில் தண்ணீர் நிறைத்து வைக்கவும். **(செம்பும் தண்ணீரும்) இறந்து முப்பத்தொரு நாட்கள் வரை இந்த விளக்கை மாலையில் ஏற்றிப் புது நீர் வைத்துக் காலையில் அணைத்து விடுக.**

## 22. உரிமைக் கஞ்சி காய்ச்சுதல்

முற்காலத்தில், இறந்தவரின் உடல் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் வரை வீட்டில் தான் வைக்கப்படுவது வழக்கம். தற்காலத்தைப் போல வர்த்தக நிலையங்களுக்கோ அன்றி வேறு இடங்களுக்கோ எடுத்துச் செல்வதில்லை. ஆகவே தான் இறந்தவுடன் கூடிய விரைவில் இறுதிச் சடங்குகளைச் செய்து, இரண்டொரு நாட்களில் பிரேதத்தை எடுத்து விடுவார்கள். பிரேதம் வீட்டில் இருக்கும் வரை, சிறுவர் உண்பதானாலும், அயலவர்கள் தம்வீடுகளுக்கு அழைத்துச் சென்று உண்ண வைப்பார்களே தவிர, பிரேதம் வீட்டில் இருக்கும் வரை அடுப்பு மூட்ட அனுமதிக்க மாட்டார்கள். கிரியை செய்த உரிமையாளர் வீடு திரும்பிய பின்னர் தான் வீட்டில் அடுப்பு மூட்டுவார்கள். அப்படி மூட்டப்பட்ட அடுப்பில் முதலில் கஞ்சி காய்ச்சுவார்கள். அந்தக் கஞ்சியில் சிறிதளவு ஒரு பாத்திரத்தில், எவரும் எச்சில்படுத்தும் முன்னர் எடுத்துத் தண்ணீரும் குத்து விளக்கும் இருக்கும் இடத்தில் வைப்பார்கள். அதன் பின்னர் மீதியாக உள்ள கஞ்சியை உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் குடிக்கக் கொடுப்பார்கள். அவ்விடத்திலே அநேகமாக இறந்தவரின் நெருங்கிய சொந்தக்காரரே நிற்பார்கள். அதனால் இக்கஞ்சியை **உரிமைக் கஞ்சி** என்று சொல்வார்கள்.

இதன் பின்னர் தான் வீட்டிலே சமையல் செய்ய அனுமதிப்பார்கள். ஆனால் இனசனக் கட்டு நிறைந்த குடும்பங்களிலே முப்பத்தொரு நாட்களும்

சமையல் செய்ய மாட்டார்கள். இனசனத்தவர்கள் இந்த முப்பத்தொரு நாட்களும் உணவுப் பண்டங்களைக் கொண்டுவந்து கொடுத்தபடியே இருப்பார்கள். இதனைப் **பட்டினிப் பண்டம்** கொடுத்தல் என்பர். இந்த வழக்கம் தற்காலத்தில் தேவையில்லை. அது அருகிக் கொண்டே வருகிறது.

## 23. இறந்த உயிருக்காகப் படைத்தல்

இந்த வழக்கம் தமிழர்களிடையே நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. சைவசமயக் கொள்கையின்படி பார்த்தால் இறந்த உயிர் பிறவாமை எய்த வேண்டும் என்பதே அனைவரது விருப்பமுமாகும். அதற்காகத்தான் இறுதிச்சடங்கில், உயிர் பிறவாமை எய்தும் கதியைச் சென்றடைய வேண்டும் என்று கற்பனையாகவும், ஒப்பனையாகவும் கிரியைகளைச் செய்கிறார்கள். அப்படி இருக்கும் போது, நெடுங்காலமாக உயிருக்கெனப் படைப்பது, கொள்கைக்கு முரணானது. எனவே இந்த வழக்கத்தைப் பின்வருமாறு குறைத்து வருகிறார்கள்.

1. உரிமைக் கஞ்சி வைத்த பின்னர் 31ஆம் நாள் வரை தண்ணீர் மட்டுமே வைப்பது.
2. எட்டுச் செலவின்பின் (இறந்து 8ஆம் நாள்வரை) 31ஆம் நாள் வரை நீரைத் தவிர வேறெதுவும் வைப்பதில்லை.
3. 31 நாட்கள் முடிந்த பின்னர் குத்துவிளக்கு ஏற்றுவதும் இல்லை நீர் வைப்பதும் இல்லை.
4. இறந்த தினத்தில் வருடத்தில் ஒரு முறை உணவு படைத்தல்.
5. வருடந்தோறும் இறந்த தினத்தில், இறந்தவரின் நினைவாக ஏதாவது அறச் செயல்களை விளம்பரம் இல்லாது செய்தல்.

**மேற்கண்ட ஐந்து முறையில் எது சரி என்று குடும்பத்தவர்களுக்குப் படுகிறதோ அதைச் செய்வது உத்தமம்.**

## 24. எட்டுச் செலவு

இறந்தவரின் உயிர் பிரிந்த எட்டு நாட்கள் கணக்கிட்டு, எட்டாவது நாள் இந்தச் சடங்கைச் செய்வது வழக்கம். அன்றைய தினம் வீட்டைக் கழுவித் துப்புரவு செய்து, உரிமைக்காரர் அனைவரும் குளித்து முழுகி, இறந்தவர் உண்ட உணவுப் பொருள்கள் அனைத்தையும் சமைப்பார்கள். நினைந்து நினைந்து ஒன்றும் விடாமல் உணவுப் பண்டங்களைச் சேகரிப்பார்கள். இறந்தவருக்கு என்ன பழக்கங்கள் இருந்தனவோ அந்தப் பழக்கத்துக்கு உரிய பொருட்களை எல்லாம் சேகரித்துக் கொள்வார்கள். பின்னர் அன்றிரவு இறந்தவரின் ஆடை அணிகள், அவர் முக்கியமாகப் பயன்படுத்திய பொருள்கள் அனைத்தையும் ஒரு கதிரை மேல் வைத்து, ஆள் அமர்ந்து இருப்பதுபோல் பாவனை செய்து விடுவார்கள். அதன்முன் சமைத்த உணவுகளைப் படைப்பார்கள். பின்னர்

கற்பூரம் கொழுத்திப் பஞ்சபுராணம் ஓதுவர். இதனை குடும்பத்தில் உள்ள வயது முதிர்ந்தவர் செய்வர். இப்படிச் செய்யும்போது பஞ்சபுராணம் ஓதி முடிந்த பின்னர், பூவும் நீரும் எடுத்து உணவில் தெளித்து, **“உண்டி ஆசையெல்லாம ஒழிக”** என்று மூன்று முறை சொல்வது நல்லது. இதன் பின்னர் அங்கு படைக்கப்பட்ட உணவுப் பொருட்களை உரிமைக்காரர் அனைவரும் பகிர்ந்து உண்பது வழக்கம்.

இறந்தவரின் உயிர் ஒருகால் இன்னும் நற்கதியில் செல்லாமல் இருப்பின், இந்த உணவு வகையின் அவாவெல்லாம் ஒழிந்து நற்கதி அடைய வேண்டுமென்பதே இப்படையலின் நோக்கம் என்று கருத வேண்டியுள்ளது. **இந்த வைபவத்தை இறந்தவரின் மிக நெருங்கிய உறவினரோடு மட்டும் வைத்துக் கொள்வது நல்லது.**

## 25. இறந்தவரின் நினைவாகச் செய்யும் அறச் செயல்கள்

எட்டுச் செலவோடு, இறந்த உயிருக்காக உணவு படைத்தலை விட்டு விடுவோரும் உளர். முப்பத்தொரு நாட்கள் மட்டும், மாலையில் திருமுறைகள் ஓதிவந்து, முப்பத்தொராம் நாள் வீட்டைத் துப்புரவு செய்து நீராடிக் கோயில் சென்று கும்பிட்டு வீடுதிரும்பி, உற்றார் உறவினரை அழைத்து இறந்தவரின் புகைப்படத்தைத் திரைநீக்கம் செய்து, திருமுறைகள் ஓதுவது உத்தமம். **“கல்வெட்டு”** மலர் வெளியிட விரும்புவோர் அதை வெளியிட்டு அன்றைய தினத்தன்று, உற்றார் உறவினரோடு சைவ உணவு உண்டு நிறைவு செய்தல் வேண்டத்தக்கது.

ஆண்டு தோறும் அவர் இறந்த நினைவாக, இறந்த தினத்தன்று ஏதாவது அறச்செயல்களை விளம்பரம் இல்லாது செய்வது உத்தமம். இவ்விடத்தில்,

> **“தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்று**
> **ஐம்புலத்து ஆறுஓம்பல் தலை”**

என்ற வள்ளுவர் வாக்கைக் கவனிக்க வேண்டும். “தென்புலத்தார்” என்பவர்கள் நம்முடைய மூதாதையர் என்று நாம் கொள்ளவேண்டும். அவர்களுடைய நினைவு எமக்கு எக்காலத்தும் வேண்டும். அவர்களுக்காக அல்ல, எமக்காக. அவர்கள் காட்டிய முன்மாதிரிகளைப் பின்பற்றி நல்வாழ்வு வாழ, அவர்களுடைய நினைவு எமக்கு வேண்டும். அந்த நினைவை மனதிற் கொண்டு, நாம் நல்ல முறையில் வாழ்வதற்கு அடையாளமாக அறச்செயல்களைச் செய்வதே எம்மை விட்டுப் பிரிந்த உயிர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

# இறுதிச் சடங்குக் காலங்களில் ஓதத்தக்க திருமுறைப் பாடல்களும் பிறவும்



## 1. திருஞானசம்பந்தர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐமேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்று அஞ்சி
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவை யாறே.

தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தமரும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தாய் ஏழை நெஞ்சே
அந்தண் ஆரூர்தொழுது உய்யலாம் மையல்கொண்டு அஞ்சல் நெஞ்சே.

வாழ்ந்த நாளும் இனிவாளுநாளும் இவை அறிந்திரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானை ஏத்தாதவிதி இல்லீர்காள்
போழ்ந்ததிங்கட் புரிசடையினான் தன் புகலூரையே
சூழ்ந்தவுள்ளம் உடையீர்கள் உங்கள் துயர்தீருமே.

திருச்சிற்றம்பலம்

## 2. திருநாவுக்கரசர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படும் ஞானத்தீயால் எதிர்கொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே.

ஈன்றாளுமாய் எனக் கெந்தையுமாய் உடன்தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்தான் மனத்துள் இருக்க
ஏன்தான் இமயவர்க் கன்பன் திருப் பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடி யோங்களுக்கே.

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூழா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெலாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசேர் ஆடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய் நம் செந்தில்மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

ஐயினால் மிடறடைப்புண்டு ஆக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத் திடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனார்க் காளாகி அன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதங்
கையினாற் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

எத்தாயார் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவர் இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்

தேனாருங் கொன்றையனே நின்றி ஊராய்
    திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
    அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.

பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற்கு இச்சையுண்டேல் இருங்கூற்று அகல
மின்னாரும் மூவிலைச்சூலம் என்மேற்பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்காமை மாடச் சுடர்க்கொழுந்தே.

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டின்
    பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டின்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
    சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
    உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்ந்த புனிதா வென்றும்
    பொழில் ஆரூராஎன்றே போற்றா நில்லே.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
    எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
    கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
    ஒக்க அடைக்கும் போது உணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
    பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

தெருளாதார் மூவெயிலும் தீயில் வேவத்
    சிலைவளைத்துச் செங்கணையால் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
    மருந்தாயப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
    அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்தும் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
    பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

காயமே கோயில் ஆகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கம் ஆக
நேயமே நெய்யும் பலா நிறையநீர் அமைய ஆட்டி
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாம் ஆரே
வந்தவா றெங்கனே போமா றேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேள்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றழுவார்க் கிருவிசும்பில் இருக்க லாமே.

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்பும் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித்தோல் ஆடைக் குழக னாகிப்
போதாய் மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகித்
தேவாதி தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராயச் சென்றடிகள் நின்ற வாறே.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமர்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழைஓர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீழா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே குறகி னோமே.

பண்டு செய்த பழவினையின் பயன்
கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே
வண்டு லாமலர்ச் செஞ்சடை ஏகம்பன்
தொண்டனாய் திரியாய் துயர் தீரவே.

திருச்சிற்றம்பலம்

## 3. சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தஎம் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்த எம்மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள் பிரானை
காதில்வெண் குழையானைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.

மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன்
வருந்த லுற்றேன் மறவாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமும் துணையென்று கருதேன்
துணையென்று நான்தொழப் பட்டவெண் காடரை
முத்தியும் ஞானமும் வானவர் அறியா
முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை அடியேன்
கழுமல வளநகர் கண்டுகொண் டேனே.

செத்தபோதினில் முன்னின்று நம்மைச்
சிலர்கள் கூடிச்சிரிப்பதன் முன்னம்
வைத்த சிந்தையுண்டே மனமுண்டே
மதியுண்டே விதியின் பயனுண்டே
முத்தனெங்கள் பிரானென்று வானோர்
தொழநின்ற திமிலேறுடை யானை
அத்தன் எந்தைபிரான் எம்பிரானை
ஆரூரானை மறக்கலு மாமே.

ஓவுநாள் உணர்வழியும் நாள் உயிர் போகும் நாள்உயர் பாடைமேல்
காவுநாள் இவை என்றலாற் கருதேன் கிளர் புனற் காவிரி
பாவுதண் புனல் வந்திழி பரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவலா உனை நான் மறக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே.

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயிர் அதனை
வவ்வினாய்க்கு உந்தன் வன்மைகண்டு அடியேன்

எந்தை நீஎனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் உந்தன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூர் உளானே.

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றி யில்வினையே துணிந்து எய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன்
அஞ்சினேன் நமனார் அவர் தம்மை
உரைப்பன் நான்உன் சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்பனே னுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே.

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
சிந்தித்தே மனம் வைக்கவும் மாட்டேன்
சிறுச்சிறிதே இரப்பார்கட்டு ஒன்று ஈயேன்
அந்தி வெண்பிறை சூடும் எம்மானே
ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தை நீஎனக்கு உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே.

மந்திரம் ஒன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயும் தொண்டன்என்னை
அந்தர மால்விசும்பில் அழகானை அருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே.

திருச்சிற்றம்பலம்

# 4. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

## 4.1 சிவபுராணம்

**திருச்சிற்றம்பலம்**

*தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி*
*அல்லல் அறுத்து ஆனந்தமாக்கியதே - எல்லை*
*மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்*
*திருவாசகம் என்னும் தேன்.*

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி

சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயாஎன ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று

பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர்ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை

மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே

கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற

தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே

கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## 4.2 கோயில் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சம்
புலன்ஐந்தின் வழிஅடைத்து அமுதே
ஊறிநின்று என்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்த மாய்க்கசிந்து உருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யான் இதற்கு இலேனொர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத்து அரைசே.

அரைசனே அன்பர்க்கு அடியனே னுடைய
அப்பனே ஆவியொடு ஆக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின்று உருக்கிப்
பொய்இருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறைஉறை சிவனே
உரையுணர்வு இறந்துநின்று உணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமாறு உணர்த்தே.

உணர்ந்த மாமுனிவர் உம்பரோடு ஒழிந்தார்
உணர்வுக்கும் தெரிவு அரும்பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப் பிறப்பறுக்கும் எம்மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்கு இனியென்ன குறையே.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
 ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
 மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
 திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடம் கொண்டாய்
 இனியுன்னை என்னிரக் கேனே.

இரந்திரந்து உருக என்மனத் துள்ளே
 எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியும் கமலச் சேவடியாய்
 திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தர ஆகாயம் நீர்நிலம் தீகால்
 ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
 கண்ணுறக் கணடுகொண் டின்றே.

இன்றெனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து
 எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
 நீஅலால் பிறிதுமற்று இன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றாம்
 திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ அல்லைஅன்றி ஒன்றில்லை
 யாருன்னை அறியகிற் பாரே.

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
 பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீர்உறு தீயே நினைவதேல் அரிய
 நின்மலா நின்னருள் வெள்ளச்
சீர்உறு சிந்தை எழுந்ததோர் தேனே
 திருப்பெருந் துறையுறை சிவனே
யார்உறவு எனக்கிங்கு ஆரயல் உள்ளார்
 ஆனந்தம் ஆக்கும்என் சோதி.

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
 ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
 அறுக்கும் ஆனந்தமா கடலே

தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகைஎனக்கு அருளாய்
வந்துநின் இணையடி தந்தே.

தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான்இதற்கு இலன்ஓர்கைம் மாறே.

திருச்சிற்றம்பலம்

## 4.3 அடைக்கலப் பத்து

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளன நின்சேவடி சேர்ந்தமைந்த
பழுத்த மனத்தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கண்ணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல் விஞானமிலா
அழுக்கு மனத்தடியேன் உடையாய்உன் அடைக்கலமே.

வெறுப்பனவே செய்யும் என்சிறுமையை நின்பெருமையினால்
பொறுப்பவனே அராப்பூண்பவனே பொங்குகங்கை சடைச்
செறுப்பவனே நின்திருவருளால் என்பிறவியை வேர்
அறுப்பவனே உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

பெரும்பெருமான் என்பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெருமான் சதுரப்பெருமான் என்மனத்தின் உள்ளே
வரும்பெருமான் மலரோன் நெடுமால் அறியாமல்நின்ற
அரும்பெருமான் உடையாய் அடியேன் உன்னடைக்கலமே.

பொழிகின்ற துன்பப் புயல்வெள்ளத்தில் நின்கழற்புணை கொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறா எறிய
அழிகின்றனன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

சுருள்புரி கூழையர் சூழலிற்பட்டு உன்திறம் மறந்திங்கு
இருள்புரி யாக்கையிலே கிடந்து எய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்க விண்ணோர் பெருமான்
அருள்புரியாய் உடையாய் அடியேனுன் அடைக்கலமே.

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப்போது வந்தென்நாள் வணங்குவன் வல்வினையேன்
ஆழியப்பா உடையாய் அடியேனுன் அடைக்கலமே.

மின்கணினார் நுடங்கும் இடையார் வெகுளிவலையில் அகப்பட்டுப்
புன்கணன் ஆய்ப்புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி
என்கணிலே அமுதூறித் தித்தித்து என்பிழைக்கு இரங்கும்
அங்கணனே உடையாய் அடியேனுன் அடைக்கலமே.

மாவடு வகிரன்ன கண்ணி பங்காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கேய இடுவாய் நின்குறிப்பு அறியேன்
பாவிடையாடு குழல்போல் கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடுவேன் உடையாய் அடியேனுன் அடைக்கலமே.

பிறிவறியா அன்பர் நின்னருள் பெய்கழல்தாள் இணைக்கீழ்
மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார் உன்னை வந்திப்பதோர்
நெறியறியேன் நின்னையே அறியேன் நின்னையே அறியும்
அறிவறியேன் உடையாய் அடியேனுன் அடைக்கலமே.

வழங்குகின்றாய்க்கு உன்னருளார் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையே என்விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்து உய்யக்கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேனுன் அடைக்கலமே.

திருச்சிற்றம்பலம்

## 4.4 வாழாப் பத்து

திருச்சிற்றம்பலம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய்ச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள் புரியாயே.

வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்கு
உணர்விறந்து உலகம் ஊடுருவும்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே என்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே.

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை
உணர்த்துவது உனக்கு எனக்குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள் புரியாயே.

வல்லைவாள் அரக்கர் புரம் எரித்தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லை மூவுலகும் உருவிஅன்று இருவர்
காணும்நாள் ஆதிஈறு இன்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள் புரியாயே.

பண்ணின்நேர் மொழியாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள் புரியாயே.

பஞ்சின்மெல் அடியாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்சவே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள் புரியாயே.

பருதிவாழ் ஒளியாய் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமாறு அறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள் புரியாயே.

பந்தணை விரலாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அந்தமில் அமுதே அரும்பெரும் பொருளே
ஆர் அமுதே அடியேனை
வந்துய்ய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள் புரியாயே.

பாவ நாசா உன்பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தம் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே

மூவுலகுருவ இருவர் கீழ் மேலாய்
முழங்க அழலாய் நிமிர்ந்தானே
மாஉரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள் புரியாயே.

பழுதில்தொல் புகழாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள் புரியாயே.

திருச்சிற்றம்பலம்

## 4.5 கண்ட பத்து

திருச்சிற்றம்பலம்

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேனைச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமில்லா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டு பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே.

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாய்அடியேன் அணிகொள்தில்லை கண்டேனே.

கல்லாத புல்லறிவில் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் ஆய்வந்து வனப்பெய்தி இருக்கும்வண்ணம்
பல்லோரும் காணஎந்தன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே.

சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல்அறுத்து ஆட்கொண்டு
பேதைகுணம் பிறர்உருவம் யான்எனதென் உரைமாய்த்து
கோதிலமுது ஆனானைக் குலவுதில்லை கண்டேனே.

பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென்று இவையிரண்டும்
உறவினோடும் ஒழியச்சென்று உலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே.

பத்திமையும் பரிசுமில்லாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தன்இவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தம்எனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே.

அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டு இங்கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு
அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவரும் தொழும்தில்லை கண்டேனே.

பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே.

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளர்ஒளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

திருச்சிற்றம்பலம்

## 4.6 குழைத்த பத்து

திருச்சிற்றம்பலம்

குழைத்தால் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி உண்டோதான்
உமையாள் கணவா எனையாள்வாய்
பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோவென்று
அழைத்தால் அருளாது ஒழிவதே
அம்மானே உன் அடியேற்கே.

அடியேன் அல்லல் எல்லாம்முன்
அகல ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியேர் இடையாள் கூறாஎங்
கோவே ஆவா என்றருளிச்
செடிசேர் உடலைச் சிதையாதது
எத்துக்கு எங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே.

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எம்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீகொண்டால்
என்தான் கெட்டது இரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே.

மான்நேர் நோக்கி மணவாளா
மன்னே நின்சீர் மறப்பித்திவ்
ஊனே புகஎன் தனைநூக்கி
உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளுநாள்
என்றென்று உன்னைக் கூறுவதே.

கூறும் நாவே முதலாகக்
கூறும் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்பும்நீ
தீமை நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசு இங்கொன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ.

வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசுஒன்று உண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.

அன்றே எந்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட்டு இருக்கும் அதுவன்றி
ஆயக்கடவேன் நானோ தான்
என்னதோ இங்கு அதிகாரம்
காயத்து இடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

கண்ணார் நுதலோய் கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணாது இரவும்பகலும் நான்
அவையே எண்ணும் இதுவல்லால்

மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
அடிமை சால அழகுடைத்தே.

அழகே புரிந்திட்டு அடிநாயேன்
அரற்று கின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்குப்
புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே.

திருச்சிற்றம்பலம்

## 4.9 பிடித்த பத்து

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட்கு அரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊத்தையேன் தனக்கு
வம்பெனப் பழுத்துஎன் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருள் துணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவதினியே.

விடைவிடாது உகந்த விண்ணவர் கோவே
வினையனேன் உடையமெய்ப் பொருளே
முடைவிடாது அடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையில் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை யாண்ட
கடவுளே கருணை மாகடலே
இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவதினியே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவதினியே.

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க்கு அரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத்து அடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவதினியே.

ஒப்புஉனக்கு இல்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமியது அளித்ததோர் அன்பே
செப்புதற்கு அரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவதினியே.

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டுஆண்டு
அளவிலா ஆனந்தம் அருளிப்
பிறவிவேர் அறுத்துஎன் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவதினியே.

பாசவேர் அறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமாறு அடியனேற்கு அருளிப்
பூசனை உகந்துஎன் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே

தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவதினியே.

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும் ஈறிலாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உனைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவதினியே.

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவதினியே.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடும் கோயிலாப் புகுந்துஎன்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவதினியே.

திருச்சிற்றம்பலம்

## 5. கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற்கு என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால்
அஞ்சல் என்றருள் செய்வான் கோயில்
கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம்பு அரும்பும் பெரும்பற்றைப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

என்னையுன் பாத பங்கயம் பணிவித்து
என்பெலாம் உருகநீ எளிவந்து
உன்னை என்பால்வைத்து எங்கும் எஞ்ஞான்றும்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே!
முன்னை என்பாசம் முழுவதும் அகல
முகத்தலை அகத்தமர்ந்து எனக்கே
கன்னலும் பாலும் தேனும் ஆரமுதும்
கனியுமாய் இனிமையா யினையே.

திருச்சிற்றம்பலம்

## 6. சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

நிட்டையிலா உடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவன் அடியாரைச்
சீராட்டும் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிழ்தினுக்கு ஆலநிழற்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்

ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

## 7. சேக்கிழார் அருளிய பெரிய புராணம்

திருச்சிற்றம்பலம்

ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியிற் சாருமால்
தேன் அடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மானடம் செய் வரதர்பொற் தாள்தொழ.

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமைவேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமைவேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்கஎன்றார்.

அண்ணலே எனை ஆண்டுகொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணிநான் தொழ நயந்தருள்புரி எனப்பணிந்தார்.

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே போதுகிறேன் எனப்புகன்று
தண்ணரிய சிவானந்த ஞானவடிவே ஆகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டரசு அமர்ந்திருந்தார்.

வருமுறைப் பிறவிவெள்ளம் வரம்புகாணா தழுந்தி
உருவெனும் துயரக்கூட்டில் உணர்வின்றி மயங்குவார்கள்
திருமணத்துடன் சேவித்து முன்செல்லும் சிறப்பினாலே
மருவிய பிறவிநீங்க மன்னுசோதியினுட் புக்கார்.

திருச்சிற்றம்பலம்

# 8. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

பிறவியலை ஆற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்குணக் கடலோனே
குறுமுனிவன் ஏத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

இருந்தவீடுங் கொஞ்சிய சிறுவரும் உறுகோளும்
இசைந்தஊரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்தநாடுங் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்குதீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்திலேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்தவேதம் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்தகாலும் தண்டையும் அழகிய பெருமாளே.

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

# 9. பட்டினத்தார் பாடல்

திருச்சிற்றம்பலம்

நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவை நன்னார் தப்பினால்
தன்னாலும் ஆடிச் சலித்திடுமே அந்தத் தன்மையைப் போல்
உன்னால் யானும் திரிவ தல்லால் மற்றுனைப் பிரிந்தால்
என்னால் இங்காவது உண்டோ  இறைவா கச்சி ஏகம்பனே.

ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேரும் சதமல்லப் பெண்டிர் சதமல்ல பிள்ளை களும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத் திலே
யாரும் சதமல்ல நின் தாள் சதங்கச்சி ஏகம்பனே.

ஆற்றிற் கரைத்த புளி ஆக்கிடாமல் என்அன்பை எல்லாம்
போற்றித் திருவுளம் பற்றும் ஐயா புரமூன் றெரித்துக்
கூற்றைப் பணி கொள்ளும் தாளுடையாய் குன்றவில்லுடையாய்
ஏற்றுக் கொடி உடையாய் இறைவா கச்சி எகம்பனே.

கல்லாப் பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையம் நின்னஞ் செழுத்தைச்
சொல்லாப்பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளாரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்துமண்ணாவதுங் கண்டு பின்னும்இந்தப்
படிசார்ந்தவாழ்வை நினைப்பதல்லாற் பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம்உய்வம் என்றறிவார் இல்லையே.

ஐயும் தொடர்ந்து விழியும்செருகி அறிவழிந்து
மெய்யும்பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றி ஊருடையீர் திருநீறுமிட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே.

## உடற்கூற்று வண்ணம்

ஒருமட மாதும் ஒருவனும் ஆகி
இன்பசுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலந்து ஒழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து
பனியில் ஓர்பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதுமம் அரும்பு கமடம் அதென்று
பார்வை மெய்வாய்செவி கால்கைகள் என்று
உருவமும் ஆகி உயிர்வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்த மடந்தை

உதரம் அகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து
மகளிர்கள் சேனை தரஅணை ஆடை
மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளிநகை ஊறல் இதழ்மட வாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியில் இருந்து மழலை பொழிந்து
வாஇரு போஎன நாமம் விளம்ப

உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடு உண்டு
தெருவில் இருந்து புழுதி அளைந்து
தேடிய பாலரொடு ஓடி நடந்து
அஞ்சு வயதாகி விளை யாடியே,
உயர்தரு ஞான குரு உபதேச
முந்தமிழின் கலையும் கரை கண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ் பதினாறு பிராயமும் வந்து
மயிர்முடி கோதி அறுபத நீல

வண்டிமிர் தண்தொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
மாதகர் போதகர் கூடி வணங்க
மதன சொரூபன் இவன்என மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து

மாமயில் போலவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர்பிற கோடி
மங்கல செங்கல சந்தகழ் கொங்கை
மருவ மயங்கி இதழ் அமுதுண்டு

தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுதல் ஆகி முது பொருளாய்
இருந்த தனங்கள் வம்பில் இழந்து
மதன சுகந்த விதனம் இதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பில் விழுந்திரு கண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோதம் அடைந்து
செங்கை யினிலோர் தடியும் ஆகியே

வருவது போவது ஒருமுது கூனு
மந்தி யெனும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாய் அறியாமல் விடாமல் மொழிந்து
துயில்வரும் நேரம் இருமல் பொறாது
தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து வறண்டு
துகிலும் இழந்து சுணையும் அழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு
கலியுக மீதில் இவர் மரியாதை
கண்டிம் என்பவர் சஞ்சலம் மிஞ்ச

கலகல என்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவும் இராமல் உரை தடுமாறிச்
சிந்தையும் நெஞ்சும் உலைந்து மருண்டு
திடமும் அழிந்து மிகவும் அலைந்து
தேறிநல் லாதர வேதென நொந்து
மறையவன் வேதம் எழுதிய வாறு
வந்தது கண்டம் என்று தெளிந்து
இனியென கண்டம் இனியென தொந்தம்
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற

கடன்முறை பேசும் எனவுரை நாவு
இறங்கி விழுந்து கைகொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து

பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே
வளர்பிறை போல எயிறும் உரோமமும்
சடையும் சிறு குஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலை போல் யமதூதர்கள் வந்து
வலைகொண்டு வீசி உயிர்கொண்டு போக

மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் காலம் அறிந்து
பழையவர் காணும் எனும் அயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தம்
இடும் எனவந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியும் என்று
பலரையும் ஏவி முதியவர் தாம்
இருந்த சவம் கழுவும் சிலரென்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து

பாவகமே செய்து நாறும் உடம்பை
வரிசை கெடாமல் எடும்என ஓடி
வந்துஇள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடி அழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும் அடியேனை இனி ஆளுமே.

திருச்சிற்றம்பலம்

# A BRIEF DESCRIPTION OF A SAIVA FUNERAL SERVICE

***Book Summary by the Author***

## 1. Introduction

The Saiva funeral service is normally conducted by a Saiva Kurukkal (Saiva priest). Brahmin priests do not conduct funeral services. Since Saiva Kurukkals are not yet available in Australia, this service is conducted by laypersons purely as a voluntary community service.

The traditional rituals involved in the service are modified to suit the circumstances prevailing in Australia and most acts are performed on a symbolic basis. The details of the service and the brief explanations of the rituals are as follows.

## 2. Installation of Deities

2.1 Lord Ganesh is installed with turmeric paste and Arugum grass.

2.2 Lord Siva and Sakthi are installed in the form of Siva Kumbam (silver pot full of water with coconut and mango leaves on top).

2.3 Kolli Kudam (earthen pot full of water with coconut and mango leaves on top): This is to invoke the departed soul to be alighted on this pot to be guided towards Lord Siva.

## 3. Commencement of worship

3.1 Confirmation of the next of kin who comes forward to partake in the ceremony.

3.2 Dedication of holy ash by singing the Saint Thiruganasambanthar’s Thevaram and wearing of holy ash.

3.3 Ganesh worship – Invoke Lord Ganesh to clear all obstacles and to grant his grace for the successful completion of all the ceremonies.

3.4 Siva worship: Invoke Lord Siva and Sakthi to be present at the ceremony and grant their grace to the departed soul on the right path to eternal bliss.

3.5 Kollikuda Pooja: Invoke the departed soul to be present at the ceremony and to be prepared to be guided towards eternal bliss with the grace of Lord Siva.

## 4. Bathing Ceremony

4.1 Close relatives of the deceased are requested to take part in a symbolic bathing ceremony where oil and fruit juice are applied to the deceased and then fresh water. Thereafter, next of kin sprinkles Kumba water on the deceased.

4.2 Then the next of kin (person who partakes in the ceremony) is requested to apply holy ash on the forehead of the deceased and place Pottu with sandalwood paste and kumkumam. Then to garland the deceased.

## 5. Pounding of Incense

5.1 Traditionally incense is pound by ladies for the purpose of bathing. In this instance this act is symbolic in relation to the holy verses of Saint Manikavaasagar dedicated to Lord Siva where a prayer is offered in the belief that sins of the departed soul be forgiven and the path to eternal bliss be shown to the departed soul.

5.2 During this prayer the twenty verses of Saint Manikavaasagar's Thiru Potchunnam (Thiru Vasagam) are sung and at the end, the things that were pounded are applied to the eyes of the deceased.

5.3 At this time the grand children of the deceased hold candle lights in the belief that the departed soul may receive enlightenment to follow the path of eternal bliss.

## 6. Floral Tribute

6.1 Friends and relatives of the deceased are invited to view the deceased and place flowers. This gives an opportunity to all those who attended the funeral service to pay their last respect.

## 7. Placing of rice in the coffin

7.1 According to Saiva belief it is best for the departed soul not to be reborn. This is the fervent hope and wish of all those who are close to the deceased. This wish is symbolically shown by placing a handful of rice in the mouth of the deceased by close relatives. Rice, which is free of husk, has no chance of germinating.

## 8. Closing of coffin & removal to cemetery

8.1 When the coffin is closed it should be ensured that all ornaments are removed from the body of the deceased. This is done in the belief that the soul should discard all desires of the world.

8.2 The next of kin is requested to carry the Kolli Kudam to the cemetery together with a firebrand. Traditionally the ceremony involves lighting of the fire and a firebrand is taken to the cemetery from that fire. Since it is not feasible to light a fire at the ceremony, a box of matches and sandal-wood sticks are carried to the cemetery together with the Kolli Kudam.

## 9. At the cemetery

9.1 Prayer: A prayer is recited by singing Pancha Puranam.

9.2 Cracking of the Kolli Kudam is placed on the shoulder of the next of kin, the sandalwood sticks are lighted and given in his hand. He is then made to go around the coffin three times. Then the water in the pot is sprinkled on the coffin. This is to indicate that all desires of the departed soul have been depleted like water in the pot.

9.3 Setting fire to the coffin: The next of kin then places the sandalwood sticks on the coffin and walks away. Thereafter with the help of the undertakers the coffin is placed at the door of the incinerator and the curtain is closed.

9.4 Obtaining the ashes: Arrangements will have to be made with the undertakers at the time of making funeral arrangement for the collection of ashes from the cemetery.

9.5 Disposal of ashes: Disposal of the ashes could be made according to the wishes of members of the family of the deceased. It could be dissolved in the ocean water, sacred rivers and/or sprinkled over the vast mountain area.

உ
சிவமயம்

# இறுதிக் கிரியைக்குத் தேவையான பொருட்கள்

## கடைச் சாமான்கள்

திருநீறு, சந்தனம், குங்குமம், மஞ்சள் மா, ஊதுபத்தி, கற்பூரம் (ஒரு பக்கற் ஒவ்வொன்றும்)

| | |
|---|---|
| தேங்காய் முடியுடன் | 3 |
| பச்சை அரிசி | 2 கிலோ |
| கும்பம் சுற்றும் நூல் | 1 பந்து |
| வாய் சிறிய மண்முட்டி | 1 |
| நல்லெண்ணெய் | 1 காற் போத்தல் |
| புதிய வெள்ளைத் துண்டு | 1 கால் மீற்றர் |
| விளக்குத் திரி | 10 |
| தீப்பெட்டிகள் | 2 |
| **Garbage bags** | **2** |
| **Box of soft tissues** | **1** |
| உதிரிப்பூக்கள் | 1 பெட்டி |
| கும்ப மாலை (சிறியது - சரம்) | 2 |
| உடலுக்கு அணிவிக்க மாலை | 1 |
| பேரப்பிள்ளைகள் இருப்பின் - மெழுகுதிரிகள் | |

**(Tea candles on paper plates would be suitable)**

வாழைப்பழம் (1 சீப்பு), தோடம் பழம் (3), மாம்பழம் (3), எலுமிச்சம் பழம் (1)

## வீட்டுப் பொருட்கள்

| | |
|---|---|
| குத்துவிளக்கு | 1 |
| சிறிய வெள்ளிக்குடம் (கும்பத்திற்கு) | 1 |
| சந்தனம், குங்குமம் கிண்ணங்கள் | 2 |
| தலை வாழை இலை | 3 |
| அறுகம் புல் | 1 பிடி |
| பசுப்பால் மிகச்சிறிய பக்கற் | 1 |
| சிறிய வெள்ளிக்கிண்ணம் | 4 |
| வெள்ளித்தட்டு சிறியது | 3 |
| வெள்ளித்தட்டு பெரியது | 2 |
| மாவிலை | 15 |
| சில்லறைக் காசுகள் (5 சத நாணயம்) | 10 |
| **Old News Paper Large sheets** | **6** |
| நிலத்தில் விரிப்பதற்குப் பெரிய விரிப்பு | 1 |

# ஆசிரியரின் பிற வெளியீடுகள்

1. குறளும் கதையும் (சிறுகதைகள்), 1973
2. பாட்டும் கதையும் (கதைப்பாடல்கள்), 1974
3. முனியன் முரளிகானன் (குறுநாவல்), 1977
4. ஆத்திசூடி அறநெறிக் கதைகள் (சிறுகதைகள்), 1978
5. உடைந்த உள்ளம் (நாவல் - 2 பாகங்கள்), 1979
6. அவுஸ்திரேலியாவில் ஆத்திசூடி (சிறுவர் கதைத்தொகுதி), 1991
7. திருமுறையும் திருக்கதையும் - தேவார விளக்கக் கதைகள், 1994
8. பாலர் நாடகங்கள் பத்து - பாலர் நாடகத் தொகுதி, 1995
9. நாடகக் கவியரங்கு நாலு - சிறுவர் கவியரங்குத் தொகுதி, 1995
10. வள்ளுவர் சொன்ன கடவுட் கொள்கை (திருக்குறள் விளக்கக் கதைகள்), 1995
11. ஆறுமுகமான பொருள் (திருப்புகழ் ஒன்றிற்கு விளக்கம்), 1996
12. திருவிழா - சிறுவர் சைவ சமய நூல், 1996
13. A Glimpse of Saiva Religion - சைவ சமய விளக்கம், 1996, சைவ மன்றம், சிட்னி, 2006
14. சிறுவர் பாடல்கள் - அவுஸ்திரேலியப் பின்னணியில், 1997
15. சகலகலாவல்லி மாலை - தமிழ், ஆங்கில உரை (திருமதி புவனேஸ்வரி அருணாசலத்துடன் இணைந்து), 1997
16. சைவ சமய குரவர் போற்றி மாலை - போற்றித் துதி, 1998
17. திருப்பள்ளி எழுச்சி - தமிழ், ஆங்கில உரை (திருமதி புவனேஸ்வரி அருணாசலத்துடன் இணைந்து), 1998
18. கோளறு பதிகம் - தமிழ் ஆங்கில உரை (திரு. கேதா மகேசனுடன் இணைந்து), 1999
19. சிட்னி முருகன் பிள்ளைத் தமிழ் - பிரபந்த நூல், 1999
20. ஔவை வந்தால் - சிறுவர் நாடகங்கள், 2001
21. சைவச் சிறுவர் பேச்சும், நடிப்பும் - குருபூசை நாடகங்கள், சைவ சித்தாந்த மன்றம், கனடா, 2006
22. Hinduism – A way of life (For Hindu children in NSW Public Schools - Edited with Mrs. Pathmini Sothirajah), 2006

## AUM MURUGA SOCIETY PUBLICATIONS

Aum Murga Society is a non-profitable organisation dedicated to serve the wider community in Australia and has the noble objective to disseminate information on all aspects of Hinduism. Since 1998, it publishes a quarterly **Aum Muruga Journal** to promote the understanding of the Hindu religion, culture, practices and traditions among the Hindus and non-Hindus. It is the first and only Hindu Journal published from Australia. It also publishes a bi-monthly **Aum Muruga Digest** (available from the Tamilsydney website: **http://www.tamilsydney.com**). The Aum Muruga Society publications are edited by **Dr. R. Sri Ravindrarajah (R.Ravindra@uts.edu.au)**. If you are interested in receiving the Aum Muruga publications, please contact Dr. R. Sri Ravindrarajah, **15 Valda Place, Baulkham Hills, NSW 2153, Australia**.